
மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை

மாலை—15



உரையாசிரியர்:
ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா
(சங்கரனடிமை)

உ

விநாயகர் துதி



திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்

உ
சிவமயம்
ஸ்ரீமஹாதேவஜயம்

மொழிக்கு மொழி தித்திக்கும்
மூவர் தமிழ் மாலை

(சம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிக வெளியீடு)

மாலை—15

உரையாசிரியர் :
சிவபுராண ஞானபூஜகர், சாஸ்த்ர பிரசார பூஷணம்,
சிவபுராணக் காவலர், சிவபுராணச் சக்கரவர்த்தி
ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா
(சங்கரன் அடிமை)




ருத்ரோத்காரி ஆண்டு
தைப்பூச நன்னாள் வெளியீடு !
19—1—1984
பிரசுரம் :
ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா
5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு,
மேலமாம்பலம், சென்னை-600033.

 1984 [விலை ரூ. 8.00

உ

சைவ சமயாசாரியார்]

நால்வர் துதி



திருஞான சம்பந்தர் | திருநாவுக் கரசர் | சுந்தர மூர்த்திகள் | மாணிக்க வாசகர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நம்சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் – முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே.

திருஞானசம்பந்தர்



புண்ணிய முதல், புனைமணி அரைஞாணொடு
போதும் கண்ணிறை கதிர்,
கலைவளர் மதி, கவின்மேவும் பண்ணியல்
கதி, பருவமதொரு மூவருடத்தே
எண்ணிய பொருளாய் நின்றவர் அருள்பெற்ற
திருஞானசம்பந்தர்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்



ஸமர்ப்பணம்

ஓம் அம்பிகாநாதாய நம:

சிவபிரானுடைய அருச்சனைக்குரிய 108 திருநாமங்கள் சிவாஷ்டோத்தரசத நாமங்கள் எனப்படும். அவற்றில் அம்பிகாநாத: என்பது 15-வது திருநாமம் ஆகும். அம்பிகையாகிய பார்வதி தேவியின் கணவர், அம்பாளுடன் எப்பொழுதும் சேர்ந்து இருப்பவர் என்றெல்லாம் பொருள்படும் ஓம் அம்பிகாநாதாய நம: என்ற இந்தப் பதினைந்தாவது திருநாம மந்திரத்தால் அருச்சித்து முத்தமிழ் விரகரான திருஞானசம்பந்தரின் சீகாழித் திருப்பதிகங்கள் சில அடங்கிய இந்தப் பதினைந்தாவது தமிழ் மாலையினை ஆதியும் அந்தமுமில்லா அரும் பெருஞ்சோதியான உமாகாந்தனுக்கு அணிவிக்கும் நற்பேற்றினைப் புண்ணியவசத்தினால் பெறுகின்றேன்.

இங்ஙனம்,

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா

உரையாசிரியர்.

சிவம்

5-2

உ

சிவமயம்

உரையாசிரியர் பணிவுரை

திருச்சிற்றம்பலம்

சுரபுரத் தார்தம் துயருக் கிரங்கிச் சுரர்கள்தங்கள்
பரபுரத் தார்தம் துயர்கண் டருளும் பரமன்மன்னும்
அரபுரத் தானடி எய்துவன் என்ப தவனடிசேர்
சிரபுரத் தானடி யாரடி யேனென்னும் திண்ணனவே.

திருச்சிற்றம்பலம்

—ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி-26

(நம்பியாண்டார் நம்பிகளருளியது : 11-ம் திருமுறை)

முப்புரத்தசுரர்களால் மிக்க துன்பம் அடைந்த தேவர்கள் சிவபிரான் ஒருவரே அவர்களையழிக்க வல்லவர் என்ற காரணத்தால் சிவபிரானிடம் முறையிட்டனர். தேவர்கள் படும் துயரத்துக்கு இரங்கிய சிவபெருமான் அத்தேவர்களுக்கு அயலாகிய (பகையாகிய) அந்த முப்புரத்தாரையும் துயரம் அடையும்படி அம்முப்புரங்களையும் எரித்துத் தேவர்கள் துயரம் நீங்கும்படி அருள் செய்தார். அத்தகைய பரமன், என்றும் நிலைத்து நிற்கும் சிவலோகநாதன், அவனது திருவடிகளைச் சென்றடைந்த சிரபுரம் என்னும் சீகாழியில் உதித்த திருஞானசம்பந்தரது அடியார்களுக்கு நான் அடியவன் என்னும் உறுதியினளவேயாகும். திருஞானசம்பந்தரது அடியார்களுக்கும் அடியவனுயிருத்தலே சிவபிரானது திருவடிகளையடைவிக்கும் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

இங்ஙனம் நம்பியாண்டார் நம்பிகளால் துதிக்கப் பெற்ற திருஞானசம்பந்தப் பெருமானுரின் திருப்பதிகங்கட்கு உரை எழுதல் என்னும் வியாஜத்தால் அப்பெருமானைக் கும்பிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நாம், சென்ற தமிழ்மாலையினைத் தொடர்ந்து, சீகாழியில் பாடியருளிய வரலாறு தெரியாத, காலம் அறிய இயலாத பதிகங்களில் மேலும் சிலவற்றை இந்தத் தமிழ்மாலையில் பிரசுரித்துள்

ளோம். எஞ்சிய திருப்பதிகங்களும் இவ்வாறே தொடர்ந்து வெளியிடப்படும்.

சிவநேயச் செல்வர்கள் தொடர்ந்து மாலைகளைப் பெற்றுப் படித்து, பதிகப்பெருவழி காட்டியருளிய பெருமானைப் பணிந்து, அப்பெருவழியில் சென்று முழு முதற் கடவுளாகிய சிவபிரானின் திருவருளைப் பெறுமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

சென்னை-33
4-1-1984

சங்கரனடிமை
ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா
உரையாசிரியர்—பதிப்பாசிரியர்

சிவஞான பூஜா மலர்—1983

சென்ற 1982 ஆண்டு வெளியிடப்பட்டது போலவே ருத்ரோத்காரி ஆண்டுக்குரிய சிவஞான பூஜா மலர்—1983 கூடிய விரைவில் வெளியிடப்படும். சென்ற ஆண்டு மலர்களி போலவே இவ்வாண்டு மலரும், 'தென்தமிழும் வடகலையும் தேசிகமும் பேசுவன, மன்றினிடை நடமாடும் வள்ளலையே பொருளாக...' என்ற சேக்கிழார் பெருமானின் வாக்குக்கு இலக்கியமாக தென்மொழி, வடமொழி நூல்களில் உள்ள சிவபரத்துவச் செய்திகள் தொகுத்துக் கட்டுரைகளாகப் பிரசுரிக்கப்படும். தோத்திரங்களும் தமிழ் உரையுடன் கொடுக்கப்படும். இந்த மலர் வெளியீட்டினால் கிடைக்கும் பொருள் மூவர் தமிழ் மாலை வளர்ச்சிக்குப் பயன்படுத்தப் படும். சென்ற இரண்டு ஆண்டுகள் போலவே இவ்வாண்டு மலருக்கும் அன்பர்கள் தாராளமாக நன்கொடைகளை வாரி வழங்கியருளுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா

5, டெலிபோஸ்டு காலனி குறுக்குத் தெரு,
மேலமாம்பலம், சென்னை – 600 033.

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்



மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை—15

திருஞானசம்பந்தர் அருளியவை.

(தொடர்ச்சி)

சீகாழி—7

பதிகவரலாறு: பன்னிரு பெயர்களையுடைய சீகாழியின் ஒவ்வொரு பெயரிலும் திருஞானசம்பந்தப் பெருமான் பாடி அருளிய பதிகங்களில் சீகாழி என்ற பெயரிலேயே பாடியருளியவற்றுள் ஆறு திருப்பதிகங்களைச் சென்ற தமிழ்மாலையில் வெளியிடும் பேறு பெற்றோம். எஞ்சிய நான்கு பதிகங்கள் இந்தப் பதினைந்தாவது தமிழ்மாலையில் கொடுக்கப்படுகின்றன. பாடிய வரலாறும் காலமும் அறிய இயலாத திருப்பதிகங்கள் மட்டுமே இந்த வரிசையில் கொடுக்கப்படுகின்றன என்பதை மீண்டும் கூற விரும்புகிறோம்,

பண் : இந்தளம்] திருச்சிற்றம்பலம் [2-ம் திருமுறை

நல்லானை நான்மறை யோடிய லாறங்கம்
வல்லானை வல்லவர் பால்மலிந் தோங்கிய
சொல்லானைத் தொன்மதிற் காழியே கோயிலாம்
இல்லானை ஏத்தநின் றார்க்குள தின்பமே. 1

பதிகப்பொழிப்புரை 1. அனைத்துயிர்க்கும் எஞ்ஞான்றும் நன்மையையே செய்பவனை, நான்மறைகளோடு இயலும் ஆறு அங்கங்களையும் வல்லவனை, (நான்மறைகளும் ஆறு அங்கங்களும்) வல்லவர்களான அந்தணர்களிடத்தில் நிறைந்து ஓங்கிய சொற்களின் வடிவானவனை, தொன்மை யான மதில்கள் சூழ்ந்த சீகாழிப் பதியினையே தனது கோயி லாம் இல்லமாகக் கொண்டவனாகிய சிவபிரானை வணங்கு வதில் நிலைத்து நின்றவர்களுக்கு இன்பம் என்றும் உள தாகும்.

நல்லான் — நல்லதையே செய்பவன் நல்லான் எனப் பட்டான். உயிர்களுக்கு இம்மை, மறுமை என இருமை யிலும் நன்மை செய்பவன் சிவபிரானேயாகலின் இங்ஙனம் கூறியருளினார். இம்மையில் இன்பஞ் செய்தலால் இறைவர் சங்கரன் எனவும், மறுமையில் நன்மை செய்தலால் மயஸ் கரன் எனவும் வேதத்தில் துதிக்கப்படுவர். 'நம: சங்கராயச' என்றும் 'மயஸ்கராயச' என்றும் திருவுருத்திரம் இறைவரைப் போற்றி செய்யும். இவ்வாறின்றி, நல்லான் என்பதற்கு மங்கள வடிவினன் என்று பொருள் உரைத்தார் திருத்தருமையாதினக் குறிப்புரையாசிரியர்.

நான்மறையோடு இயலும் ஆறங்கம் வல்லான் —'ஈசான: ஸர்வ வித்யானாம்' என்ற வேத வாக்கியத்தின்படி இறை வரே கலைகள் எனப்படும் அனைத்துக்கும் தலைவராதலால் இங்ஙனம் கூறியருளினார். இவற்றைத் தந்தவர் இறை வரே என்பது கருத்து. நான்மறை, ஆறங்கம் பற்றிய

விளக்கம் முன்பு வந்த இடங்களில் கூறியவை கண்டு கொள்க.

வல்லவர் — இங்கு 'வல்லவர்' என்பது, மேற்கூறிய நான்கு வேதங்களிலும் ஆறு அங்கங்களிலும் தேர்ச்சி பெற்றவர் என்ற பொருளில் வந்தது. வல்லவர்பால் — வல்லவரிடத்தில் என்று பொருள்.

மலிதல் — நிறைதல், மிகுதல்; ஓங்குதல் - உயர்தல்

சொல்லானை — சொல்லின் வடிவாயிருப்பவனை, சொல் இங்குத் தோத்திரம் என்ற பொருளில் வந்ததாகக்கொள்க.

நான்கு வேதங்களையும், ஆறு அங்கங்களையும் நன்கு கற்றுத் தேர்ச்சி பெற்ற அந்தணர்கள், அக்கல்வியின் பயனாக சிவபிரானே முழு முதற் கடவுள் எனத்தெளிந்து, அப்பெருமானையே நாளும் தோத்திரம் செய்தவர் என்பது கருத்தாகக் கொள்க.

தொன்மதிற்காழி — தொன்மையை மதிலுக்கும் காழிக்கும் கூட்டுக. தொன்மையான மதில், தொன்மையான காழி.

கோயிலாம் இல்லானை — கோயில் என்பது கோ + இல் அதாவது அரசரது இருக்கை எனப் பொருள்படும். எல்லோருக்கும் அரசன் ஈசனாகையால் அவனது இருப்பிடமே கோயில் என வழங்கப்படலாயிற்று. இங்குச் சீகாழிப்பதியையே தனது சிறந்த இருப்பிடமாம் இல்லமாகக் கொண்டவன் என்று குறிப்பிட்டருளினார்.

உளது இன்பமே — இதனை இன்பமே உளது என மாற்றி இன்பமே என்பதில் உள்ள 'ஏ' காரத்தால் இன்பந்தவிர வேறு துன்பம் என்பது ஒரு நாளுங்கிடையாது என்று தேற்றியதாகவும் கொள்க,

நம்மான மாற்றி நமக்கரு ளாய்நின்ற
பெம்மானைப் பேயுடன் ஆடல் புரிந்தானை
அம்மானை அந்தணர் சேரு மணிகாழி
எம்மானை ஏத்தவல் லார்க்கிட ரில்லையே. 2

2. நமது குற்றமாகிய மும்மலக் கட்டினை ஒழித்து, நமக்கு அருள் புரியும் அனுக்கிரஹ மூர்த்தியாய் நின்ற பெருமானை, பேய்களுடன் ஆடல் புரிந்தானை, அருமையான கடவுளை, அந்தணர்கள் சேருகின்ற அழகிய சீகாழியில் கோயில் கொண்டருளிய எமது கடவுளாகிய சிவபிரானைத் துதித்து வணங்க வல்லவர்களுக்கு (எந்நாளும்) இடர் இல்லையாம்.

நம்மானம் — நம்+மானம்; மானம் — இங்குக் குற்றம் என்ற பொருளில் வந்தது, நம்மை அநாதியாய் பிடித்திருக்கும் குற்றம் ஆணவம், கன்மம், மாயை எனப்படும் மும்மலமாம்.

''நம்மான மாற்றி நமக்கு அருளாய் நின்ற பெம்மான்'' என்பதில், நம் குற்றங்களை மாற்றி என்று பொருள் கூறுவதே பொருந்தும் எனினும், அருட் பெரியார் ஒருவர் ந — ம என்னும் ஈரெழுத்தையும் மாற்றி வ காரம் (அருள்) ஆகி நின்ற பெருமான் (சி காரம்) என்று உபதேசித்தருளியது யாவரும் அறியத்தக்கது. ந + ம + ஆன = நம்மான என்று பிரித்தார். 'ப + அந்தம் = பாந்தம்' (நன்னூல் 145) என்றதைக் கொள்ளும் புலவர்க்கு இது பொருந்துவதே'' இவ்வாறு திருத்தருமையாதீனத்து மூன்றும் திருமுறை குறிப்புரை நூலில் சிற்றுராய்ச்சி பெரும் பொருட் கட்டுரைகள் என்ற தலைப்பில் அவ்வாதீன வித்வானாயிருந்த திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் எழுதிய கட்டுரையில் திருவைந்தெழுத்து என்ற இரண்டாவது உட்தலைப்பில் (பக்கம் 18) கொடுக்கப் பட்டுள்ளதும் இங்குக் கொள்ளற்குரியது.

அந்தணர் — எல்லா உயிர்களின் மேலும் செவ்விய தண்ணளியைப் பூண்டொழுகும் அறநெறியில் நிற்பவர். (தண்ணளி — இரக்கம், கிருபை).

இடர் — துன்பம், ஆபத்து

அருந்தானை அன்புசெய் தேத்தகில் லார்பால்
பொருந்தானைப் பொய்யடி மைத்தொழில் செய்வாருள்
விருந்தானை வேதியர் ஓதி மிடைகாழி
இருந்தானை ஏத்துமின் நும்வினை ஏகவே. 3

3. அன்பு செய்து வணங்கமாட்டாதவரிடத்து அரியவனை, (உண்மையான பக்தி இல்லாது) பொய்யாக அடிமைத் தொழில் புரிவார் உள்ளத்தில் பொருந்தாதவனை, புதியவற்றுக்கும் புதியவனை, வேதியர்கள் வேதங்களை ஓதிக் கொண்டே (வழிபடுதற்கு) கூடுகின்ற சீகாழியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருந்த சிவபிரானை, உங்களது வினைகள் போகும்படித் துதியுங்கள்.

"அன்பு செய்தேத்தகில்லார் பால் அருந்தானை, பொய்யடிமைத் தொழில் செய்வாருள் பொருந்தானை" என்று கூட்டிப் பொருள் கொள்ளப்பட்டது.

அருந்தானை — அரியவனை, அருமையானவனை. 'அருந்தலே அருமை உண்டல்' என்பது சூடாமணி நிகண்டு. அன்பு செய்து ஏத்த வல்லார்களுக்கு அவன் எளியவன், அங்ஙனம் ஏத்த மாட்டாதவர்க்கு அவன் அரியவன் என்று கூறியதாம். "அரியயனுக்கு அரியானை, அடியவருக்கெளியானை ...." என்பது தெய்வப்புலவர் சேக்கிழார் திருவாக்கு. (பெரிய புராணம், திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் 144ம் திருப்பாடல்)

பொய்யடிமைத் தொழில் — உள்ளன்பு இல்லாமல் பிறர் பாராட்டுக்காகப் பக்தர் போல் சிவனடிமைத் தொழில் செய்தல். திருக்கோயிற் பணி புரிவோருள்ளும், இவ்வடிமைத் திறம் தமக்கு வாய்த்த பெரும் புண்ணியம் எனக்

கொள்ளாது அதனை ஊதியத்துக்காகவே செய்யும் பணி என்று உள்ளன்பிலராய்ச் செய்பவர்கள் ஒரு சிலரேனும் உளரன்றோ? இத்தகையோரிடத்தில் இறைவன் பொருந்த மாட்டான் என்பதாம்.

விருந்தானை — புதியவனை. '.........பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப்பெற்றியனே' என்பது மாணிக்கவாசகரின் மணிமொழி. (திருவாசகம், திருவெம்பாவை-9)

வேதியர் — வேதம் ஓதும் குலத்தினர்.

ஓதிமிடைதல் — பெயரளவில் மட்டும் வேதியராகாது, வேதங்களை ஓதிக் கொண்டே கூடி இறைவனை வழிபாடு செய்கின்றனர் என்பதாம்.

இருந்தானை — நிலையாக எழுந்தருளியிருந்தவனை.

புற்றானைப் புற்றர வம்மரை யின்மிசைச்
சுற்றானைத் தொண்டுசெய் வாரவர் தம்மொடும்
அற்றானை அந்தணர் காழி அமர்கோயில்
பற்றானைப் பற்றிநின் றார்க்கில்லை பாவமே. 4

4. புற்றானவனை, புற்றில் வாழும்பாம்பினை அரையின் மீது சுற்றுதலையுடையவனை, தொண்டுகளைச் செய்பவர்களாகிய அடியார்களோடும் அவர்கள் உள்கிய அத்தன்மைத்தே ஆவானை, அந்தணர்கள் வாழ்கின்ற சீகாழித்திருக்கோயிலில் விரும்பி எழுந்தருளிய யாவர்க்கும் பற்றாய சிவபிரானைப் பற்றி நின்றவர்க்குப் பாவம் இல்லை என்பதாம்.

புற்றான் — புற்றில் எழுந்தருளியவன். திருவாரூர்ப் பெருமான் வன்மீகநாதன், புற்றிடங் கொண்டான் என்று வழங்கப்படுதல் காண்க. மற்றும் பந்தணைநல்லூர் போன்ற வேறு சில தலங்களிலும் இறைவர் புற்றினிடமாக எழுந்தருளிய வரலாறுகளும் இங்குக் கொள்ளற்குரியன.

இவ்வாறின்றி புற்று என்பதற்கு எழுத்து, சென்னி (தலை) போன்ற பொருள்களும் உளவாகையால் தலைவனை என்றோ, எழுத்து ஆவானை என்றோ கொள்ளுதலும் பொருந்தும்.

சுற்றான் — பாம்பினை இடையின் மீது கச்சை போல சுற்றுதலை உடையவன்.

அற்றானை — அற்று+ஆனை — அத்தன்மைத்து ஆவானை "யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே, அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்" என்று அப்பரடிகளும், "எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள் அவ்வுருவாய்த் தோன்றி அருள் கொடுப்பான்" என்று ஆதியுலாவில் சேரமான் பெருமாள் நாயனாரும் அருளிச் செய்தபடி தொண்டர்கள் சிவமூர்த்தங்களுள் எதனைத் தம்முள்ளத்தில் பற்றுகின்றார்களோ அத்தன்மையாய் நின்று அவர்களுக்கு அருள் புரிவான் என்றபடி.

பற்றானை - எல்லோருக்கும் பற்றுக்கோடாயிருப்பவனை,

"புற்றிடங் கொண்ட புராதனனைப் பூங்கோயில் மேய பிரானை யார்க்கும், பற்றிடம் ஆய பரம்பொருளை.........' எனச் சேக்கிழார் பெருமானும் அருளிச் செய்திருத்தல் காண்க. (பெரியபுராணம், தடுத்தாட்கொண்ட புராணம் 125-ம் திருப்பாடல்)

"அமர் கோயில் காழி அந்தணர் பற்றானை" என்று கூட்டி "விரும்பி எழுந்தருளிய கோயிலாகிய சீகாழியில் வாழும் அந்தணர்களுக்குப் பற்றானவனை" என்று பொருள் கோடலும் பொருத்தமே. "அந்தணர் தம் சிந்தையானை" என வரும் அப்பரடிகளின் அருள் மொழியுங் காண்க. திருஞானசம்பந்தர் காலத்துக்கு முன்னும் அவரது காலத்தும் அந்தணர்கள் சிவபிரானையே முழு முதற் கடவுள் எனத் தெளிந்து அப்பெருமானையே தமக்குப் பற்றுதற்குரிய தெய்வமாகக் கொண்டிருந்தனர் என்பது இதனால் பெறப்படுகின்றது. இற்றை நாள் அந்தணர்கள் பெரும்பான்மை சிவ

பக்தியில்லாது வைணவ மோகத்திற் சிக்குண்டிருப்பதும் காலத்தின் கோலம் போலும்! என்று மடியுமோ இந்த வைணவ மோகம்?

பற்றி நின்றார்க்கு இல்லை பாவமே — "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு" என்ற செந்தமிழ்ப் பொது மறைப்படி. (திருக்குறள்-350) இறைவனையே பற்றுக்கோடாகக் கொண்டு அதில் நிலைத்து நின்றவர்க்கு உலகப் பற்றுகள் யாவும் நீங்குதலால் (அவ்வுலகப் பற்றுகள் காரணமாகவே பாவம் உண்டாவதால்) பாவம் இல்லை என்று அருளிச் செய்தனர் பிள்ளையார் என்று அறிந்து தெளிக.

நெதியானை நெஞ்சிடங் கொள்ள நினைவார்தம்
விதியானை விண்ணவர் தாம்வியந் தேத்திய
கதியானைக் காருல வும்பொழிற் காழியாம்
பதியானைப் பாடுமின் நும்வினை பாறவே. 5

5. (பக்தர்களுக்கு உண்மையான) செல்வமாயிருப்பவனை, தங்களது நெஞ்சங்களிலே இறைவர் இடங் கொள்ள வேண்டுமென்று நினைப்பவர்களுக்கு தியானிப்பதற்கு உரிய வேதாகம முறையாக நிற்பவனை, தேவர்கள் வியந்து துதித்த (அவர்கட்கு என்றும்) புகலிடமானவனை, மேகங்கள் உலாவுகின்ற பொழில்களையுடைய சீகாழி என்ற தலத்தைக் கோயிலாகவுடைய சிவபிரானை, உங்களது வினைக் கூட்டங்கள் யாவும் அழிந்து போகும்படி (அவனது பொருள் சேர் புகழ்களை எல்லாம்) பாடுங்கள்.

நெதி — நிதி என்பதன் மரூஉ "………… தில்லைச் சிற்றம்பலம் மேய, செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே" என்று திருஞானசம்பந்தர் கோயிற் பதிகம் 5-ம் திருப்பாடலில் அருளிச்செய்துள்ளதும் காண்க.

இவ்வாறின்றி, நெதியானை என்பதற்கு எண்ணெய்த் தாரை போல் இடைவிடாது சிந்தித்தற்குரியானை (நிதித்

தியாசனம் எனல் காண்க) இதனால் ஏனைத் தேவர்கள் அங்ஙனம் சிந்தனைக்குரியவராகாமையுங் கண்டு கொள்க என்பது இராணிப்பேட்டை புலவர் திரு. பி. மா. சோமசுந்தரனார் அவர்களது விளக்கக்குறிப்பு.

விதியானை — உள்குதற்கு வேறொரு பொருளுமில்லையாகையால் தானே உரிய விதியாக நிற்பவனை. "பொறிவாயில் ஐந்தவித்தான் ஒழுக்க நெறி நிற்றல் வேண்டுதலின் (அந்நெறித் தலைவனாதலின்) விதியானை என்றார்.

கதியானை — புகலிடமாவானை; விண்ணோர் அவ்வப்போது நேருந்துன்ப நீக்கத்தின் பொருட்டன்றி வீடு வேண்டிச் சரண்புகுமியல்பில்லவராகலின் கதியானை என்றார். (இவையும் இராணிப்பேட்டை புலவர் திரு. பி. மா. சோமசுந்தரனார் அவர்களது விளக்கக் குறிப்பு)

பதியான் — நகரையுடையவன், நகரிலே எழுந்தருளியவன்.

பாற — அழியும்படி.

செப்பான மென்முலை யாளைத் திகழ்மேனி
வைப்பானை வார்கழ லேத்தி நினைவார்தம்
ஒப்பானை ஓதம் உலாவு கடற்காழி
மெய்ப்பானை மேவிய மாந்தர் வியந்தாரே. 6

6. செப்பினை ஒத்தனவும், மென்மையானவையுமான திருமுலைகளையுடைய உமாதேவியாரை விளங்குகின்ற தமது திருமேனியின் இடது பாகத்தில் வைத்தலையுடையவனை, வாருடன் கூடிய கழல்களையணிந்த திருவடிகளைத் துதித்து நினைப்பவர் தம்மிடத்தில் பொருந்தல் உடையவனை, அலைகள் உலாவுகின்ற கடலருகே உள்ள சீகாழியில் எழுந்தருளிய மெய்ப்பொருள் ஆன சிவபிரானை விரும்பி வழிபட்ட மனிதர்களே பிறரால் வியந்து பேசற்குரிய மேன்மையர் ஆவர்.

ஒப்பு — 'ஒப்பு' என்னும் சொல்லுக்குப் 'பொருந்தல்' என்ற பொருளும் உண்மையால் 'பொருந்தலுடையவனை' என்று பொருள் கொள்ளப்பட்டது.

மெய்ப்பானை — அதாவது எக்காலத்தும் அழியாது ஒரே படித்தாயிருக்கும் 'சத்' எனப்படும் மெய்ப்பொருளாயிருப்பவனை என்று கூறியதாம்.

வியந்தார் — பிறரால் வியந்து பாராட்டுதலை உடையார் எனக்கொள்க.

இவ்வாறின்றி, "கடற்காழி மேவிய மெய்ப்பானை வியந்தாரே மாந்தர்" எனக்கூட்டி, சீகாழியில் கோயில் கொண்ட மெய்ப்பொருளான சிவபிரானை வியந்தவர்களே உண்மையில் மாந்தர்கள் ஆவார்கள் எனக் கூறியருளியதாகக் கொள்ளினும் சிறக்கும். இங்குச் சிவபிரானை வியத்தல் என்பது அப்பெருமானின் பொருள்சேர் புகழ்களைப் பாடித் துதித்தலாம்.

துன்பானைத் துன்பம் அழித்தரு ளாக்கிய
இன்பானை ஏழிசை யின்னிலை பேணுவார்
அன்பானை அணிபொழிற் காழி நகர்மேய
நம்பானை நண்ணவல் லார்வினை நாசமே. 7

7. துன்ப வடிவாயிருப்பவனை, அத்துன்பத்தையழித்து அருளாக்கியபேரின்ப வடிவானவனை, ஏழு இசைகளின் நிலையை அறிந்து அவற்றை விரும்பிப் பாடுபவர்களுடைய அன்பு வடிவானவனை, அழகிய பொழில்கள் சூழ்ந்த சீகாழி நகரில் விரும்பி எழுந்தருளிய சிவபிரானைச் சரணடைய வல்லவர்களது வினைகள் அழிந்து போகும்.

துன்பம், இன்பம் இவை முறையே இறைவனின் மறக்கருணையையும், அறக்கருணையையும் குறிக்கும். "வெய்யாய் தணியாய் இயமானனும் விமலா" (சிவபுராணம்-36வது அடி) "இன்பமும் துன்பமும் உள்ளானே இல்லானே" (சிவபுராணம்-70) என்ற திருவாசகக் கருத்து இங்கு கொள்ளற்குரியது. மேலும், "பந்தம் வீடு தரும் பரமன் கழல்" என்ற

பெரிய புராண வாக்கும் காண்க. (தடுத்தாட் கொண்ட புராணம்-154ம் திருப்பாடல்) இங்கு பந்தம் என்பது துன்பத்தையும் வீடு என்பது இன்பத்தையும் குறிக்கும் எனக் கொள்க. எனவே, இறைவன் தனது திரோதான சக்தியால் பந்தத்தை உண்டுபண்ணித் தன் அனுக்கிரஹ சக்தியால் வீடு பேற்றையும் அருளுகின்றான் என்பது கருத்து.

ஏழிசையின் நிலை பேணுவார் — ஏழிசையின் நிலையை விரும்புவார் என்பதால் அவற்றை விரும்பிப் பாடுவார் என்று கொள்ளப்பட்டது. இறைவர் இன்னிசையை விரும்புபவர் என்பது இராவணனது சாம கானத்தை ஏற்று அருள் செய்ததினின்றும் விளங்கும். "அளப்பில கீதஞ் சொன்னார்க்கு அடிகள் தாமருளுமாறே" என்ற அப்பரடிகளின் அருள் வாக்குங் காண்க. கீதம் என்பது இசையுடன் பாடுதலேயாகும்.

நம்பான் - 'நம்பு' என்னும் சொல் விருப்பம் என்ற பொருள் தரும். எனவே விரும்பப்படுபவன் நம்பான் எனப்படுவன். அனைவராலும் விரும்பப்படுபவன் சிவபிரானே என்பது கருத்து.

நண்ணல் — சேருதல், அடைதல். இங்குச் சரணடைதலின் மேல் நின்றதாகக் கொள்க.

குன்றானைக் குன்றெடுத் தான்புயம் நாலைந்தும்
வென்றானை மென்மல ரானொடு மால்தேட
நின்றானை நேரிழை யாளொடுங் காழியுள்
நன்றானை நம்பெரு மானை நணுகுமே. 8—9

(8—9) திருக்கயிலாய மலையைத் தனது இருப்பிடமாகக் கொண்டவனை, அந்த மலையைப் பெயர்த்தெடுத்தலில் தலைப்பட்ட இராவணனது இருபது தோள்களையும் நெருக்கி வெற்றியடைந்தவனை, பிரமதேவனோடு திருமாலும் (முறையே முடியும் அடியும்) தேடும்படி அனற்பிழம்பாய் நின்றவனை, உமாதேவியாரோடு சீகாழிப்பதியில்

அனைவர்க்கும் நன்மை செய்பவனாய் எழுந்தருளிய சிவபிரானைச் சென்று அடையுங்கள் (சரணமடையுங்கள் என்று உலகர்க்கு அறிவுறுத்தியதாகக் கொள்க)

வென்றானை — வெல்லுதல், இராவணனது இருபது தோள்களையும் நெரித்து அவனைப் புலம்பும்படிச் செய்ததைக் குறித்தது.

நேரிழை — நேர்த்தியான ஆபரணங்கள் என்றபொருள் படும் இச்சொல் அவற்றை அணிந்த பெண்ணைக் குறிக்கும். இங்கு உமாதேவியாரைக் குறித்தது.

நன்றானை — நன்மையே வடிவாகி, நன்மையே செய்வானை; முதல் திருப்பாடலில் நல்லான் என்ற சொல்லின் உரைக்குறிப்பும் காண்க.

சாவாயும் வாதுசெய் சாவகர் சாக்கியர்
மேவாத சொல்லவை கேட்டு வெகுளேன்மின்
பூவாய கொன்றையி னானைப் புனற்காழிக்
கோவாய கொள்கையி னானடி கூறுமே. 10

10. தோல்வியடைந்தாலும் (விடாது) வாதம் புரிதலை மேற்கொள்ளும் இயல்பினர்களான சமணர்கள், பௌத்தர்கள் கூறுகின்ற பொருந்தாத சொற்களைக் கேட்டு (அம்மாதிரி கூறும் அவர்களிடம்) கோபங் கொள்ளாதீர்கள். கொன்றைப்பூ மாலையணிந்தவனும், நீர்வளம் மிக்க சீகாழியில் கோயில் கொண்ட தலைமைத் தன்மைக்குரிய கொள்கைகளையுடையவனுமாகிய சிவபிரானது திருவடிகளைப் புகழ்ந்து துதி செய்தலையே மேற்கொள்ளுங்கள்.

சாவாயும் வாது செய்தல் — திருஞானசம்பந்தப் பெருமான் பாண்டியனின் வெப்பு நோயினைப் போக்கியருளினார். சமணர்கள் அந்நோயினைப் போக்க மாட்டாது தோல்வியுற்றனர். திருஞானசம்பந்தர் தீயினில் இட்ட ஏடு எரிந்து போகாமையேயன்றிப் புதியதாய்ப் பச்சையாய்த் திகழ்ந்தது. சமணர்கள் இட்ட ஏடோ கரிந்து போய்விட்டது.

இங்ஙனம் இரு முறை தோற்றும், மேலும் மூன்ருவது முறையாகப் புனல் வாதம் செய்ய விரும்பினுர்கள். இவ்வாறே பௌத்தர்களும் போதிமங்கை என்னுமிடத்தில் திருஞான சம்பந்தரின் திருமொழியே (ஓரன்பர் ஆணையிட்டுரைக்க) தங்கள் தலைவனுகிய புத்தநந்தி என்பானை இடியுண்டழியச் செய்தது கண்டும் தேருது சாரிபுத்தனை ஏவி மேலும் வாதத்துக்கு நின்ருர்கள். அவர்களது இந்த இயல்பினையே 'சாவாயும் வாதுசெய் சாவகர், சாக்கியர்' என்றருளிச் செய்தனர் ஆளுடைய பிள்ளையார்.

சாவு — அழிவு; சாவகர் — சமணர்.

இத்திருப்பாடல் குறிப்பினுல், இத்திருப்பதிகம் திருஞானசம்பந்தர் மதுரையினின்றும் மீண்டருளி, தொண்டை நன்னுட்டுத் தலயாத்திரையினைத் தொடங்கும்வரை சீகாழியில் எழுந்தருளியிருந்த காலத்தில் பாடியிருக்கலாம் என்று கொள்ளலாம்.

கோவாய கொள்கை — கோ — தலைவன்; எல்லார்க்கும் தானீசன் என்றபடி முழுமுதற் கடவுளாகும் தன்மைக்கு உரியதான கொள்கைகளையுடையவன். கொள்கை — இங்குக் குணங்களின் மேல் நின்றது. எண்குணத்தான், அறுகுணபரிபூரணன், எனவே தலைமைக் கடவுள் என்று உணர்த்தியருளினர் ஆசாரியர் எனக் கொள்க.

புறப்புறச் சமயிகளது பொருந்தாக் கூற்றுக்களைக் கேட்டு அவர்களது கன்மவினை இருந்தவாறு என்னே என்று அவர்கள் மீது இரக்கங் கொண்டு கோபங்கொள்வதைத் தவிருங்கள். நமது முழுமுதலாம்பரனுன சிவபிரானைத் துதிப்பதிலேயே உங்கள் சிந்தையைச் செலுத்துங்கள் என்று உலகத்தவர்களை நெறிப்படுத்தியருளியதாகக் கொள்க.

கழியார்சீ ரோதமல் குங்கடற் காழியுள்
ஒழியாது கோயில்கொண் டானை யுகந்துள்கித்

தழியார்சொல் ஞானசம் பந்தன் தமிழார
மொழிவார்கள் மூவுல கும்பெறு வார்களே. 11

திருச்சிற்றம்பலம்

11. கழிகளிற் பொருந்திய நீர்ப்பெருக்கு நிறைந்த கடற்காழியுள் என்றும் நீங்காது கோயில் கொண்டு எழுந்தருளிய சிவபிரானை விரும்பி, நினைந்து, உள்ளத்தால் தழுவுதலைப் பொருந்திய சொற்களையுடைய திருஞான சம்பந்தரது தமிழ்ப் பதிகத்தை நிறையப் பாடுபவர்கள் மூவுலக ஆட்சியினையும் பெறுவார்கள்.

கழி — உப்பளம். சீர் ஓதம் — மிகுதியான நீர்ப் பெருக்கு

உள்குதல் — நினைத்தல், தியானித்தல் என்னும் பொருளுடையது.

தழியார் — தழுவுதலைப் பொருந்திய. தழுவுதல் இங்கு உள்ளத்தால் தழுவுதலைக் குறித்தது.

மூவுலகு — விண்ணுலகம், மண்ணுலகம், பாதாள உலகம் (சுவர்க்கம், மத்தியம், பாதாளம் என்பது வடமொழி வழக்கு)

குறிப்பு : இத்திருப்பதிகத்தின் 9வது திருப்பாடல் மறைந்து போயிற்று.



உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

சீகாழி — 8

பண் : பியந்தைக்காந்தாரம்] [2ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பொங்கு வெண்புரி வளரும் பொற்புடை மார்பனெம் பெருமான்
செங்கண் ஆடர வாட்டுஞ் செல்வனெம் சிவனுறை கோயில்
பங்க மில்பல மறைகள் வல்லவர் பத்தர்கள் பரவும்
தங்கு வெண்திரைக் கானல் தண்வயல் காழிநன் னகரே. 1

பதிகப்பொழிப்புரை : 1. பொலிகின்ற வெண்ணிறத்தை உடைய நூலாலாகிய முப்புரியென்னும் பூணூல்வளர்கின்ற அழகுடைய மார்பனாகிய எமது பெருமானும், சிவந்த கண்ணையுடையதும் படமெடுத்து ஆடுமியல்புள்ளதுமான பாம்பினை ஆட்டுகின்ற செல்வனுமாகிய எமது சிவபெருமான் உறைகின்ற கோயில் (யாதெனில்) குற்றமற்ற பல மறைகளில் வல்லவரும் பக்தர்களும் துதித்து வணங்குதலை உடைய, வெண்மையான கடலலைகள் தங்குகின்ற கானல்களையும், குளிர்ச்சி மிக்க வயல்களையும் உடைய சீகாழி என்னும் நல்ல நகரமாகும்.

பொங்குதல் — பொலிதல், மிகுதல், உயர்தல், செழித்தல் முதலிய பொருள்கள்.

வளர்தல் — சிறத்தல் என்ற பொருள் இங்குச் சிறக்கும்.

பங்கம் இல் — குற்றம் இல்லாத; அழியாமை எனப் பொருள் கொண்டு வேதம் நித்தியம் எனக் கூறினர் தருமை ஆதினக் குறிப்புரையாசிரியர்.

செல்வன் எம் சிவபெருமான் உறை கோயில் பங்கமில் பல மறைகள் வல்லவர்களும், பத்தர்களும் பரவும் காழி நன்னகர் என்க.

தேவர் தானவர் பரந்து திண்வரை மால்கடல் நிறுவி
நாவ தாலமிர் துண்ண நயந்தவர் இரிந்திடக் கண்டு
ஆவ வென்றரு நஞ்சம் உண்டவன் அமர்தரு மூதூர்
காவ லார்மதில் சூழ்ந்த கடிபொழிற் காழிநன் னகரே. 2

2. தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து திண்ணிய மேரு மலையைப் பெரிய பாற்கடலில் மத்தாக நிறுவித் (அக்கடலைக் கடைந்து) தங்களது நாக்குகளால் அமிர்தம் உண்ண விரும்பியவர்கள், (நஞ்சு தோன்றிடலும் அதனால் அஞ்சி) ஓடுதலைக் கண்டு ஆ ஆ, என்று திருவுள்ளமிரங்கி அந்த அரிய நஞ்சினை உண்டருளியவனான சிவபிரான் விருப்பத்துடன் எழுந்தருளிய பழமையான ஊர் (யாதெனில்) காவல் பொருந்திய மதில்கள் சூழ்ந்ததும் மணம் மிக்கபொழில்கள் நிறைந்ததுமான சீகாழி நன்னகரேயாகும்.

கரியின் மாமுக முடைய கணபதி தாதைபல் பூதந்
திரிய இல்பலிக் கேகுஞ் செழுஞ்சுடர் சேர்தரு மூதூர்
சரியின் முன்கைநன் மாதர் சதிபட மாநட மாடி
உரிய நாமங்கள் ஏத்தும் ஒலிபுனற் காழிநன் னகரே. 3

3. அழகிய யானையின் முகத்தையுடைய கணபதியின் தந்தையும், பலபூதங்கள் உடன்திரிய (சூழ) இல்லந்தோறும் பலிக்குச் சென்றவனுமாகிய செழுஞ்சுடராம் சிவபெருமான் சேர்ந்து இருக்கின்ற பழைமையான ஊர் (யாதெனில்) வளையல்களணிந்த முன்கைகளையுடைய அழகிய மகளிர் தாளஒத்துக்கேற்றபடி அழகிய நடனங்களை ஆடி சிவபெருமானுக்குரிய திருநாமங்களை ஓதித் துதிக்கின்றதும் ஒலிக்கும் நீர் நிறைந்ததுமான சீகாழி நன்னகரேயாகும்.

சரி — வளையல்; சதி — தாளவொத்து.

செழுஞ்சுடர் — அழியாததும், அறியும் ஆன்மாக்களிடத்திலே வளர்வதுமாகிய ஒளி (தருமை ஆதீனக் குறிப்புரை.) இறைவனைச் சுடராகக் கூறிய இடங்கள் திருமுறைகளில் நிறைய உள்ளன.

'செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற்சோதி மிக்க உருவே' அப்பர். 'சோதியே சுடரே சூழொளி விளக்கே' 'செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தி' தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி' — திருவாசகம். இன்னன பல.

திருக்கோயிலில் இறைவர் திருவுருவத்தை நன்கு அலங் கரித்துத் திருமண்டபத்தே எழுந்தருளுவித்து, உருத்திர கணிகையர் ஆடலும் பாடலுமாகிய பணி செய்யும் வழக்கம் முன்னாளில் இருந்தது. அவ்வழக்கத்தையே இங்குக் குறிப்பிட்டருளினர் பிள்ளையார் எனக் கொள்க.

சங்க வெண்குழைச் செவியன் தண்மதி சூடிய சென்னி
அங்கம் பூணென உடைய அப்பனுக் கழகிய ஊராந்
துங்க மாளிகை உயர்ந்த தொகுகொடி வானிடை மிடைந்து
வங்க வாண்மதி தடவு மணிபொழிற் காழிநன் னகரே. 4

4. வெண்மையான சங்கினால் ஆன குழையையுடைய செவியையுடையவனும், குளிர்ச்சி பொருந்திய சந்திரனைச் சூடிய தலையினையுடையவனும், எலும்பை ஆபரணமாக உடையவனுமான, அனைவர்க்குந் தந்தையான சிவபிரானுக் குரிய அழகிய ஊராவது (யாதெனில்) உயர்ச்சி பொருந்திய மாளிகைகளின் மீது உயர்ந்த ஒன்றாகத் தொக்க கொடிகள் வானத்திடை நெருங்கி வெள்ளியைப் போன்ற ஒளிமிக்க சந்திரனைத் தொடுகின்றதும் அழகிய பொழில்கள் சூழ்ந்தது மான சீகாழி நன்னகரேயாகும்.

குழை — ஆண்களின் காதாபரணம், அங்கம்—எலும்பு. துங்கம் — உயர்ச்சி, தொகு கொடி — தொக்க (கூடிய) கொடிகள், மிடைதல் — நெருங்குதல், சேருதல், வங்கம் — வெள்ளி.

தொகுகொடி வானிடை மிடைந்து வங்க வாண்மதி தடவும் காழிநகர், அணிபொழில்காழி நகர் என்று கொள்க.

மங்கை கூறமர் மெய்யான் மான்மறி ஏந்திய கையான்
எங்கள் ஈசனென் றெழுவார் இடர்வினை கெடுப்பவற் கூராஞ்
சங்கை யின்றிநல் நியமந் தாஞ்செய்து தகுதியின் மிக்க
கங்கை நாடுயர் கீர்த்தி மறையவர் காழிநன் னகரே. 5

5. உமாதேவியார் ஒரு பாகமாகப் பொருந்திய திருமேனியையுடையவனும், மான் கன்றினை ஏந்திய கையை உடையவனும், எங்கள் ஈசன் என்று தொழுதற்கு எழுவாரது இடர்களையும் வினைகளையும் கெடுத்து அருள் செய்பவனுமாகிய சிவபிரானுக்கு ஊராவது (யாதெனில்) ஐயமேதுமின்றி தமக்குரிய நியமங்களைச் செய்து ஒழுக்கத்தால் மிக்கவர்களும் (அதனால்) கங்கை நாடு வரையிலும் பரவிய உயர்ந்த கீர்த்தியையுடையவர்களுமான மறையவர்கள் வாழ்கின்ற சீகாழி நன்னகரேயாகும்.

எழுதல் — முயற்சி செய்தல், இவ்வாறின்றி விழித்து, எழுதல், மூலாதாரத்திலிருந்து சுழுமுனை நாடி வழியாகத் தியானித்து எழுதல் என்று உரை கண்டனர் திருத்தருமை ஆதீனக் குறிப்புரையாசிரியர்.

இடர் — துன்பம், தரித்திரம்; வினை — இடருக்குக் காரணமான ஊழ்வினை.

வினை கெடுத்தல் — வினைகளைப் போக்கிப் பிறவியை ஒழித்துப் பேரின்பம் அளித்தலாம்.

சங்கை — ஐயம், சாத்திரங்களில் விதிக்கப்பட்ட நியமங்கள் (அனுஷ்டானங்கள்) உண்மையில் பயனளிப்பனவா என்ற சந்தேகம். வேதத்தில் நம்பிக்கை உள்ளோர்க்கு இந்த சங்கை ஏற்படாது.

நியமங்கள் — முறைமையாகச் செய்ய வேண்டிய சமயக் கடன்கள். இவற்றை நித்திய கர்மானுஷ்டானங்கள் என்று கூறுவது மரபு.

தகுதி — ஒழுக்கம். தகுதியின் மிக்க மறையவர், கங்கை நாடுயர் கீர்த்தி மறையவர் என ஈரிடத்தும் கூட்டிப் பொருள் கொள்க.

நாறு கூவிள மத்தம் நாகமுஞ் சூடிய நம்பன்
ஏறும் ஏறிய ஈசன் இருந்தினி தமர்தரு மூதூர்
நீறு பூசிய உருவர் நெஞ்சினுள் வஞ்சமொன் றின்றித்
தேறு வார்கள்சென் றேத்துஞ் சீர்திகழ் காழிநன் னகரே. 6

6. மணம் வீசுகின்ற வில்வம், ஊமத்த மலர், புன்னை மலர் ஆகியவற்றைச் சூடிய நம்பனும், இடபத்தின் மீதும் ஏறிய ஈசனுமான சிவபெருமான் இனிதாகப் பொருந்தி இருக்கும் பழமையான ஊர் (யாதெனில்) திருநீறு பூசிய திருமேனியுடையவர்களும், நெஞ்சில் வஞ்சம் ஏதும் இல்லாது தெளிந்த மனதுடையவர்களும் சென்று ஏத்து கின்ற பெருமை விளங்குகின்ற சீகாழி நன்னகரேயாகும்.

நாகம் — புன்னாக மலர்; நம்பன் — உயிர்களால் விரும்புதற்குரியவன்.

ஏறும் ஏறிய ஈசன் — ஏறும் என்பதில் உள்ள 'உம்'மை யால், யானை குதிரை போன்ற உயர்ந்தவைகளாய்க் கருதப் படும் ஊர்திகள் இருப்பவும் அவற்றை விடுத்து ஈசன் இடபத்தைக் கொண்ட சிறப்பைக் குறித்தருளினர் எனக் கொள்க.

"மடகரியும் பரிமாவும் தேரும்உகந் தேறாதே
இடபம்உகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ
தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ"

என்ற திருவாசகம் — திருச்சாழல் 15ம் திருப்பாடல் இங்கு ஒப்பு நோக்குதற்குரியது. இத்திருப்பாடல் கூறுவது யாதெனில் "தோழியே, தலைமக்களுக்குரிய மதம் பொழியும் யானையும் தாவிச்செல்லும் குதிரையும், தேரும் உளவா யிருக்கவும், சிவபெருமான் அவற்றை விரும்பி ஊர்ந்து

ஏறிச்செல்லாது, இடபத்தை (எருதினை) விரும்பி ஊர்ந்து செல்வதுபற்றிக் கூறுவாயாக எனக் கேட்ட ஒரு பெண்ணுக்கு மற்றொரு பெண் விடை கூறுகிறாள். தோழி! மும்மதில்களை சிவபிரான் எரித்த அந்நாளில் ஆனேற்று வடிவமாய்த் திருமால் சிவபிரானைத் தாங்கினான் என்று அறிவாயாக.''

இதனால் திருமாலே விரும்பி எடுத்த ஆனேற்று வடிவம் எத்துணைச் சிறந்ததாகும் என்பது பெறப்படும் இஃதேயன்றி, அறக்கடவுளும் தான் என்றும் அழியாது இருத்தலை வேண்டி, சிவபிரானை எருது வடிவமாகித் தாங்குகிறது என்பதும் கந்த புராணத்தால் அறியப்படும்.

நெஞ்சினுள் வஞ்சமொன்றின்றித் தேறுவார்கள் இறைவனை என்றது, உள்ளும் புறமும் ஒத்துத் தொழுபவர்களைக் குறித்தது. முன் பதிகத்தில் ''பொய்யடிமைத் தொழில் செய்வாருள் பொருந்தானை'' என்றருளிச் செய்ததும் இங்கு ஒப்பு நோக்கற்குரியது. ''பொக்கம் மிக்கவர் பூவும் நீருங் கண்டு நக்கு நிற்பன் அவர் தமை நாணியே'' என்பது அப்பரடிகளின் அருமைத் திருவாக்கு.

(5-ம் திருமுறை)

நடம தாடிய நாதன் நந்திதன் முழவிடைக் காட்டில்
விடம மர்ந்தொரு காலம் விரித்தறம் உரைத்தவற் கூராம்
இடம தாமறை பயில்வார் இருந்தவர் திருந்தியம் போதில்
குடம தார்மணி மாடங் குலாவிய காழிநன் னகரே. 7

7. நந்தி தேவர் மத்தளம் வாசிக்கக் கானகத்தில் திருக்கூத்தாடிய நாதனும், ஒரு சமயம் திருக்கயிலாய மலையில் (ஆசிரியக் கோலத்தில்) அமர்ந்து (சனகாதி இருடியர்க்கு) அறநூற் பொருளை விரித்து உரைத்தவனுமாகிய சிவபிரானது ஊர் (யாதெனில்) மறை பயில்பவர்களும் பெரிய தவஞ்செய்தலை மேற் கொண்டவர்களும் (தங்களது வசிக்கும்) இடமதாகக் கொண்டதும், திருத்தமாகச்

செய்யப்பட்ட அழகிய போது போன்ற குடங்கள் பொருந்திய மணிமாடங்கள் விளங்குதலையுடைய சீகாழி நன்னகரேயாகும்.

காட்டில் நடமாடிய நாதன் — "ஆடினார் கானகத்து" என்ற திருமுதுகுன்றத் திருப்பதிகப் பாடற்பகுதியுங்காண்க. (தமிழ் மாலை 6, பக்கம் 53)

முழவு — மத்தளம், பறை முதலிய வாத்தியங்கள்.

விடம் — மலை என்ற பொருளும் உள்ளது. எனவே திருக்கயிலாய மலை எனப் பொருள் உரைக்கப்பட்டது.

இடமதாம் - "மறை பயில்வார் இருந்தவர் இடமதாம்" என மாற்றிப் பொருள் கொள்ளப்பட்டது.

திருந்தியம்போதில் — திருந்திய அம் போது இல் எனப் பிரித்து "திருத்தமாக அமைந்த அழகிய போது போன்ற" என்று பொருள் கொள்ளப்பட்டது. போது — அலரும் பருவத்து அரும்பு. இல் — உவம உருபு. போதில் குடம் என்பது போது போன்ற குடம் என்று பொருள்படும். போது குடத்தின் வடிவுக்கு உவமை. குடம்—கலசம்.

கலசங்கள் பொருந்திய அழகிய மாடங்கள் விளங்கிய சீகாழி நன்னகர் என்பது கடைசி வரியில் கூறப்பட்ட செய்தியாம்.

திருந்திய என்பதற்கு தாங்குதல் என்று பொருள் கொண்டனர் புலவர் திரு. பி. மா. சோமசுந்தரனார் அவர்கள். "திருத்தலே திருந்தல் தாங்கல் — நிகண்டு" என்பது அவரது எடுத்துக்காட்டு. அங்ஙனமாயின் மணி மாடங்களைத் தாங்குவன போன்ற அமைப்பில் குடங்கள் அமைக்கப்பட்டிருக்கும் எனக் கொள்க.

கார்கொள் மேனியவ் வரக்கன் றன்கடுந் திறலினைக் கருதி
ஏர்கொள் மங்கையும் அஞ்ச எழில்மலை எடுத்தவன் நெரியச்
சீர்கொள் பாதத்தோர் விரலாற் செறுத்தவெம் சிவனுறை
கோயில்
தார்கொள் வண்டினஞ் சூழ்ந்த தண்வயற் காழிநன் னகரே. 8

8. கரிய நிறம் கொண்ட உடலையுடைய அரக்கனாகிய இராவணன் தனது வலிமையைப் பெரிதாக மதித்து, உமாதேவியாரும் அஞ்சும்படி அழகிய திருக்கயிலாய மலையினை எடுத்த அவன் (தோள்களும் சிரங்களும்) நசுங்கும்படிச் சிறப்புடைய தனது திருப்பாதத்து ஒரு விரலால் நெருக்கிய (அழுத்திய) எமது சிவபிரான் உறைகின்ற திருக்கோயில் (யாதெனில்) பூக்களைக் கொள்கின்ற வண்டுகளின் கூட்டம் சூழ்ந்ததும், குளிர்ச்சி பொருந்திய வயல்களையுடையதுமான சீகாழி நன்னகரேயாகும்.

ஏர் கொள் மங்கை — 'ஏர்' அழகு. அதனையுடைய மங்கை, இங்கு உமாதேவியாரைக் குறித்தது.

எழில் — அழகு, அல்லது எழுச்சி அதாவது உயர்ச்சியைக் குறித்ததாகவும் கொள்ளலாம்.

தார் — பூ, தேனுக்காக வண்டினம் பூக்களை அடைவதால் தார் கொள் வண்டினம் எனக் கூறியருளினர்.

தார் கொள் வண்டினஞ் சூழ்ந்த காழி நன்னகர், தண் வயற் காழி நன்னகர் என இருவழியும் கூட்டிப் பொருள் கொள்க.

மாலும் மாமல ரானும் மருவினின் றிகலிய மனத்தால்
பாலுங் காண்பரி தாய பரஞ்சுடர் தன்பதி யாகுஞ்
சேலும் வாளையுங் கயலுஞ் செறிந்துதன் கிளையொடு மேய
ஆலுஞ் சாலிநற் கதிர்கள் அணிவயற் காழிநன் னகரே. 9

9. திருமாலும் பிரம்மதேவனும் ஒன்று சேர்ந்து தமக்குள் முரண்பாடு கொண்ட மனத்தையுடையவராய்

(பேரொளிப் பிழம்பாய பரமனைக் காண முற்பட்டபோது) ஒரு சிறு பகுதியும் காண்பதற்கரியதாய பரஞ்சுடராய் நின்ற சிவபிரானுடைய பதியாவது, சேல் - வாளை - கயல் போன்ற பல வகைப்பட்ட மீன்கள் நெருங்கிக் கூடி தமது இனத்துடன் பொருந்தி இருக்கின்ற, ஆடுகின்ற நெல்கதிர்கள் அழகு செய்கின்ற வயல்களையுடைய சீகாழி நன்னகரே ஆகும்.

பாலுங்காண்பரிதாய பரஞ்சுடர் — 'பால்' என்னும் சொல்லுக்கு இயல்பு, உரிமை, குணம், பகுதி, பக்கம் என்பன போன்ற பொருள்கள் உளவாகையால் நாம் "ஒரு சிறு பகுதியும் காண்பதற்கரிய பரஞ்சுடர்" எனப் பொருள் கொண்டோம். பாலும் என்பதில் உள்ள 'உம்'மையும் இம் மாதிரி பொருள் கொள்வதற்குத் துணை செய்கிறது.

திருத்தருமபுர ஆதீனக் குறிப்புரையாசிரியர், 'பால்' என்பதற்குப் பக்கம் எனக் கொண்டு "தனது பக்கத்தையும் காண்டற்கு எளிதல்லாத மெய்யொளி" என உரைத்தனர்.

இவ்விரண்டுமின்றி, 'மாட்சி' எனப் பொருள் கொண்டு இராணிப்பேட்டை புலவர் திரு பி. மா. சோமசுந்தரனார் அவர்கள் கூறுவதாவது: "ஒரு சிறு பகுதியும் காண்டற்கரிய பரஞ்சுடர் என்பது சிறக்குமாயினும் மனத்தால் என்று முத்தமிழ்விரகர் குறிப்பிடலால் 'மாட்சி' என்றுங் கூறலாமே. மால், பிரமர் அவன் திருவடி முடிகளைக் கண்ணுற் காண்டற்கியலாதவராயினரன்றியும், இகலிய மனத்தால் அவன் மாட்சியும் காண்டற்காற்றலிலராயினரென்க. 'பால் வெண்மை திசை வகுத்தல் பயங்குணம் பக்க மாட்சி சால் வெண்பால், விதையிடப்பேர் சாற்று மீரைந்தென்றேயாம்' என்பது காண்க".

ஆலும் சாலி — ஆடுகின்ற நெல் பயிர்.

வயலுக்கு அழகு நெல்லும் கரும்பும் விளைதலே என்று கூறப்படுதலால் "ஆலுஞ்சாலி நற்கதிர்கள் அணி வயல்"

எனக் கூறியருளியதாகக் கொள்க. "நிலத்துக்கு அணி யென்ப நெல்லுங் கரும்பும்" என்பது கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான் சுவாமி களவர்கள் குறிப்பிட்டுள்ள மேற்கோளாகும். (ஸ்ரீ குமர குருபரர், மார்கழி இதழ், பக்கம் 97.)

புத்தர் பொய்மிகு சமணர் பொலிகழல் அடியிணை காணுஞ்
சித்த மற்றவர்க் கிலாமைத் திகழ்ந்தநற் செழுஞ்சுடர்க் கூராஞ்
சித்த ரோடுநல் லமரர் செறிந்தநன் மாமலர் கொண்டு
முத்த னேயரு ளென்று முறைமைசெய் காழிநன் னகரே. 10

10. பொன் போலும் சுடர் விட்டுப் பிரகாசிக்கின்ற கழல் அணிந்த இரண்டு திருவடிகளையும் உணரும் உள்ளம் இல்லாதவர்களாகிய, பொய் வார்த்தைகளையே மிகுதி யாகப் பேசும் புத்தர்கள் சமணர்கள் ஆகிய இவர்க்கு அருள் பெறுதல் இல்லாதபடி விளங்கிய செழுமையான ஒளி யாகிய சிவபிரானுக்கு ஊராவது (யாதெனின்) அட்டமா சித்திகளும் வல்லவர்களோடு தேவர்களும் செறிந்த நல்ல அழகிய மலர்களைக்கொண்டு (பூசித்து) முத்தனே! அருள் புரிவாய் என்று முறையிட்டுக்கொள்ளும் சீகாழி நன்னகரே யாகும்.

பொய் மிகு புத்தர், பொய் மிகு சமணர் என ஈரிடத் தும் இயைத்துப் பொருள் கூறப்பட்டது.

பொலிகழல் — பொலிதலையுடைய அதாவது ஒளி விட்டுப் பிரகாசித்தலையுடைய கழல்.

காணும் சித்தம் — 'சித்தம்' என்றதால் காணும் என்ப தற்கு உணரும் என்று பொருள் கொள்ளப்பட்டது.

சித்தமற்றவர்க்கிலாமை — சித்தம் அற்றவர்க்கு இலாமை என்று பிரித்துப் பொருள் கொள்க.

இலாமை - இல்லாதபடி, அருள் பெறுதல் இல்லாதபடி

சித்தர் — சித்திகள் கைவரப் பெற்றவர். அல்லது சித்து என்பதற்கு ஞானம் என்பது பொருளாகையால் அதை உடையவர் சித்தர் அதாவது ஞானிகள் எனவுங் கொள்க. ஞானிகளோடு தேவர்களும் இங்குப் பெருமானிடம் முறையீடு செய்து கொள்கிறார்கள் என்ற பொருள் சிறக்கும்.

முத்தன் — இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கியவன். (இது இறைவனின் எண்குணங்களுள் ஒன்றாகும்.)

ஊழி யானவை பலவும் ஒழித்திடுங் காலத்தி லோங்கு 11

திருச்சிற்றம்பலம்.

11. பிரளய வெள்ளங்கள் பலவற்றையும் ஒழித்துவிடும் காலத்தில் (தான் அழியாது) ஓங்குதலையுடைய......என்ற பொருள் தரும் முதல் அடி மட்டுமே உள்ளது. அடுத்த அடி காழி என ஆரம்பமாகியிருத்தல் கூடும். முதல் அடி தவிர மற்ற மூன்று அடிகளும் மறைந்து போய்க் கிடைக்காதாயின.

திருச்சண்பை விருத்தம்—1

திருச்சிற்றம்பலம்

பாலித் தெழில்தங்கு பார்முகம் உய்யப் பறிதலையோர்
மாலுற் றழுந்த அவதரித் தோன்மணி நீர்க்கமலத்து
ஆலித் தலர்மிசை அன்னம் நடப்ப அணங்கி தென்றுச்
சாலித் தலைபணி சண்பையர் காவலன் சம்பந்தனே.

—நம்பியாண்டார் நம்பிகளருளியது, 11ம் திருமுறை

இந்த அழகிய நிலவுலகம் உய்யவும், பறித்த தலை மயிரையுடைய சமணர்கள் மயங்கி அழுந்தவும் அவதரித்தவன் (யாவனெனில்) அழகிய நீர்நிலையிலே தாமரை மலர் மீது அன்னம் அசைந்து நடக்க அதனைத் தெய்வமகள் என்று எண்ணி நெற்பயிர் தலை வணங்குகின்ற திருச்சண்பை நகருளோர்க்கு காவலனாகிய திருஞானசம்பந்தனே யாகும். சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

சீகாழி—9

பண் : செவ்வழி] திருச்சிற்றம்பலம் [2-ம் திருமுறை

பொடியிலங்குந் திருமேனி யாளர்புலி யதளினர்
அடியிலங்குங் கழலார்க்க ஆடும்மடி கள்ளிடம்
இடியிலங்குங் குரலோதம் மல்கவ்வெறி வார்திரைக்
கடியிலங்கும் புனல்முத் தலைக்குங்கடற் காழியே. 1

பதிகப்பொழிப்புரை : 1. திருநீறு விளங்கும் திருமேனியையுடையவரும், புலியின் தோலை உடையாகவுடையவரும், திருவடிகளிலே விளங்கும் வீரக்கழல்கள் ஒலிக்க நடனமாடுகின்றவருமான சிவபெருமானது இருப்பிடம் (யாதெனில்) இடியின் ஓசை விளங்குகின்ற கடலலைகள் பெருக (அக்கடல்) எறிகின்ற அந்த நீண்ட அலைகளின் மிகுதி விளங்குகின்றதும், முத்துக்களை அலைக்கின்றதுமான நீரையுடைய கடலைக் கொண்ட சீகாழியாகும்.

அதள் — தோல்; அடிகள் — சுவாமி; இடியிலங்கும் குரல் ஓதம் — கடல் அலையொலி இடியின் ஒலி போன்று இருந்தது என்பதாம். அலைத்தல் — அசைத்தல்.

கடற்காழி — கடலையுடைய சீகாழி. பின் வரும்இடங்களிலெல்லாம் இம்மாதிரியே கொள்க.

மயலிலங்குந் துயர்மா சறுப்பானருந் தொண்டர்கள்
அயலிலங்கப் பணிசெய்ய நின்றவ்வடி கள்ளிடம்
புயலிலங்குங் கொடையாளர் வேதத்தொலி பொலியவே
கயலிலங்கும் வயற்கழனி சூழுங்கடற் காழியே. 2

2. மயக்கம் விளங்கும் துயர்களையும், குற்றங்களையும் அறுப்பவரும், அருமையான தொண்டர்கள் அருகிலே இருந்து வழிபாட்டுக்கு உறுப்புக்களாகிய திருப்பணிகளைச்

செய்யும்படி நின்றவருமாகிய சிவபெருமானது இருப்பிடம் (யாதெனின்) மேகத்தின் தன்மை விளங்குகின்ற கொடையாளர்களாகிய அந்தணர்களது வேத ஒலி மிகுதியாகவிளங்குவதும் கயல்மீன்கள் விளங்குதலையுடைய வயல்களாகிய கழனிகள் சூழ்ந்த கடற்காழியே யாகும்.

மயல் — மயக்கம், மோகம்; மயல் இலங்குதல் — மயலே துயர் மாசு இவைகளின் விளைவாதலைக் குறித்தது.

துயர்மாசு — துயரும் மாசும். உம்மைத் தொகை விரித்துப் பொருள் கொள்க.

அயலிலங்கப்பணி — 'அயலில் அங்கப்பணி' எனப் பிரித்துப் பொருள் கொள்ளப்பட்டது. அங்கப்பணி என்பதற்கு உடம்பால் செய்யும் பணி அதாவது சரியை எனவுங் கொள்க.

புயலிலங்கும் கொடையாளர்! — புயல் - மேகம்; மேகத்தின் இயல்பு கைம்மாறு வேண்டாது மழை பொழிதலாம். அத்தன்மை சீகாழிப்பதியின் கொடையாளர்களிடம் விளங்குகிறது என்று குறிப்பிட்டருளியதாகக் கொள்க. கொடையாளர்கள் மேகம் போலக் கைம்மாறு வேண்டாது கொடுப்பவர்கள் என்பதாம்.

பொலிதல் — மிகுதல், சிறத்தல்; கயல்இலங்கும் - மீன்கள் நிறைந்திருத்தலையுடைய (இதனால் நீர் வளம் கூறியதாம்). வயற்கழனி - வயல், கழனி இரண்டும் விளைநிலம் என்ற ஒரே பொருளைத் தரும் சொற்கள்.

கூர்விலங்குந் திரிசூல வேலர்குழைக் காதினர்
மார்விலங்கும் புரிநூலு கந்தம்மண வாளனூர்
நேர்விலங்கல் லனதிரைகள் மோதந்நெடுந் தாரைவாய்க்
கார்விலங்கல் லெனக்கலந் தொழுகுங்கடற் காழியே. 3

3. கூர்மை விளங்குகின்ற மூத்தலைச் சூலமாகிய வேலினையுடையவரும், குழையணிந்த காதினையுடையவரும்,

மார்பிலே விளங்கும் முப்புரி நூலினை விரும்பி அணிந்து கொண்டவரும், மணவாளனுமாகிய சிவபிரானது ஊர் (யாதெனில்), எதிர்கின்ற மலையையொத்த அலைகள் மோத அதனால் உண்டாகும் நீரொழுக்கினிடமாக மேகங்களும் மலைகளெனக் கலந்து மழை பொழியவுள்ள கடலைக் கொண்டசீகாழியாகும்.

குழை — ஆண்களின் காதாபரணம்; மார்வு — மார்பு; புரிநூல் — முப்புரி நூலென்னும் பூணூல்.

மணவாளன் — ஆண்மகன், நாயகன். இறைவரே அனைத்துயிர்க்கும் நாயகராதல் பற்றி மணவாளன் எனக் கூறியருளினார். அனைத்துயிர்களும் பெண் தன்மையன. இறைவர் ஒருவரே புருடர் ஆவார்.

பின்னிரண்டடிகளிலும் முறையே 'விலங்கல் அன' என்றும் விலங்கல் என' என்றும் பிரித்துப் பொருள் கூறப்பட்டது. விலங்கல் - மலை; தாரை - நீரொழுக்கு, பெரு மழை.

குற்றமில்லார் குறைபாடு செய்வார்பழி தீர்ப்பவர்
பெற்றநல்ல கொடிமுன் னுயர்த்தபெரு மானிடம்
மற்றுநல்லார் மனத்தால் இனியார்மறை கலையெலாங்
கற்றுநல்லார் பிழைதெரிந் தளிக்குங்கடற் காழியே. 4

4. குற்றமற்றவரும், குறைபாடுகளைத் தம்மிடம் முறையிடுபவர்களது பழியைத் தீர்த்து அருள் செய்பவரும், எருதாகிய நல்ல கொடியினை உயர்த்தியவருமாகிய சிவபிரானது இருப்பிடம் (யாதெனின்) (இயல்பாகவே) நல்லவர்களும், மனத்தினால் இனியவர்களும், மறைகளையுங் கலைகளையுங் கற்று அதனால் நன்மை பயக்கத் தக்கனவற்றைத் தெரிந்து கொண்டவர்களும் ஆகிய அந்தணர்கள் பிறர் மாட்டு குற்றங்கண்டாலும் அதனைப் பொறுத்துத் தலையளி செய்யும் கடற்காழியாகும்.

பெற்றம் — எருது; நல்ல கொடி — சிவபிரானுரது கொடியாகிய எருது அறக்கடவுளாகையால் நல்ல கொடி என்றருளினுர்.

நல்லார் — நற்செய்கைகளையுடையவர். மனத்தால் இனியார் — மனது பயக்கும் இனிமை கருணையேயாகலின் கருணையுடையவர் என்பது பொருள்.

மறைகளையெலாங் கற்று நல்லார் — வேதங்களையும், பிற கலைகளையுங்கற்று நல்லனவற்றையெல்லாம் தெரிந்து கொண்டவர்கள்.

அளிக்கும் — தலையளி செய்யும். தலையளி — பேரன்பு

குற்றமற்றவரும், முறையிடுவாரது பழிகளைப் போக்குபவரும், அறக்கடவுளைக் கொடியாகப் பிடித்தவருமாகிய இறைவரது ஊராதலின் அங்குள்ளவர்களும் அம்மாதிரியே நன்மையுடையவர்களாய்ப் பிறர் குற்றங்களைப் பொறுத்துக் கருணை காட்டும் இயல்பினராக விளங்குகின்றனர் என்பது கருத்து.

விருதிலங்குஞ் சரிதைத்தொழி லார்விரி சடையினுர்
எருதிலங்கப் பொலிந்தேறும் எந்தைக்கிட மாவது
பெரிதிலங்கும் மறைகிளைஞர் ஓதப்பிழை கேட்டலாற்
கருதுகிள்ளை குலந்தெரிந்து தீர்க்குங்கடற் காழியே 5

5. புகழ் விளங்குகின்ற பிச்சையெடுத்தல் தொழிலையுடையவரும், விரிந்த சடையினையுடையவரும், ஊர்தியாக எருது விளங்க அதன்மீது விளக்கத்துடன் ஏறுகின்ற எமது தந்தையுமாகிய சிவபிரானுக்கு இருப்பிடமாவது (யாதெனின்) பெரியதாகிய சிவம் எனும் (செம்பொருள்) விளங்குகின்ற வேதத்தை வேதியர்கள் ஓதுங்கால் முன்பு சரியாகக் கேட்டறிந்தமையால் பின்னர் பிழையாக ஓதும்போது கிளியினங்கள் அப்பிழைகளைத் தெரிந்து திருத்துகின்ற கடற்காழியேயாகும்.

விருது — புகழ்; சரிதை — பிச்சை. "போற்றிய பயிக் கம் பாகம் பொருந்திய பலியே பிண்டம் சாற்றிய பிடிதம் ஐயம் சரிதை ஏழ் பிச்சையின் பேர் (சூடாமணி நிகண்டு). பிச்சையெடுத்தல் எங்கும் இழிந்ததாகக் கூறப்பட்டிருப்ப, 'விருதிலங்கும் சரிதை' என ஞானத்தமிழாகரர் கூறியருளியது எங்ஙனம் பொருந்தும் என்றதொரு ஐயமெழலாம். சிவபிரான் பிச்சையெடுத்தது, கர்மாவே பிரம்மம் (கர்மப் பிரம்மவாதிகள்) எனத் தங்களது யாகயக்ஞங்களால் தம்மைப் பெரிதாக மதித்து இறைவரிடம் பக்தி இல்லாது தருக்குற்றிருந்த தாருகவனத்து இருடியர்களையும், தங்களது கற்பின் மேம்பாட்டை எண்ணிச் செருக்குற்றிருந்த அவ் விருடியர்களின் பத்தினிமார்களையும் நன்னெறிப்படுத்தி அவர்களுக்குப் பக்தியை ஊட்டுவதற்காகவேயாகலின் அத்தகைய புகழ் விளங்கும் பிச்சைத் தொழில் என்பது பொருந்துவதே அன்றோ? இதுவே சிறந்த பொருள் என்பது எமது உறுதியான கருத்து. இனி, சரிதை என்பதற்கு ஒழுக்கம் எனப் பொருள் கூறினர் திருத்தருமை ஆதீனக் குறிப்புரையாசிரியர்.

வேதியர்கள் மறைகளையோதும்போது கிளிகள் முன்பும் கேட்டிருக்கின்றன. பின்னர் ஓதுபவர்கள் பிழையாக ஓதுதலையுங் கேட்கின்றன. முன்னர் சரியாக ஓதக் கேட்டிருந்த கேள்வி வலிமையினால், பிழைகளைத் தெரிந்து திருத்து கின்றன. இத்தகைய அற்புதம் நிகழும் சீகாழி என்பது இப்பாடலின் பின்இரண்டு அடிகள் தெரிவிக்கும் செய்தியாகும்.

பெரிதிலங்கும் மறை—பெரிது இலங்கும் மறை, பெரியது அதாவது பிரமம் என உபநிடதங்களில் பேசப்படும் பொருள் அதுவே சிவம் எனப்படுவதாம். பெரும் பொருளும், பரம் பொருளுமாகிய அச்சிவத்தை வேதங்கள் விளக்குதலால் 'சிவம் விளங்கும் மறை' என்ற பொருள் தரத்தக்க 'பெரிதிலங்கும் மறை' எனக் கூறியருளினார் என்க.

தோடிலங்குங் குழைக்காதர் வேதர்சுரும் பார்மலர்ப்
பீடிலங்குஞ் சடைப்பெருமை யாளர்க்கிட மாவது
கோடிலங்கும் பெரும்பொழில்கள் மல்கப்பெருஞ் செந்நெலின்
காடிலங்கும் வயல்பயிலும் அந்தண்கடற் காழியே. 6

6. தோடும் குழையும் விளங்குகின்ற காதுகளையுடையவரும், வேதப் பொருளாய் விளங்குபவரும், வண்டுகள் மொய்க்கின்ற மலர்களால் சிறந்து விளங்கும் சடையினால் பெருமையுடையவருமான சிவபிரானார்க்கிடமாவது (யாதெனில்) மரக்கிளைகள் விளங்குகின்ற பெரிய பொழில்கள் மல்குதலையும், பெருமையுடைய செந்நெல்பயிர்களின் காடுகள் விளங்கும் வயல்கள் மிகுதலையுமுடைய அழகிய குளிர்ச்சி பொருந்திய கடற்காழியேயாகும்.

தோடுங் குழையும் — உமையம்மையின் பாகம் தோடு, இறைவரின் பாகம் குழை. எனவே அர்த்தநாரீசுவர மூர்த்தியின் திருவுருவத்தை நினைப்பித்தார் என்க.

பெருஞ்செந்நெல் — நெல்லினங்களில் சிறந்தது செஞ்சம்பாவாகலின் பெருமையுடைய செந்நெல் என்றார்.

செந்நெலின் காடு — நெற்பயிர் மிகவும் நெருக்கமாக வளர்ந்திருந்தமையால் காடு எனக்கூறினார்.

மலையிலங்குஞ் சிலையாக வேகம்மதில் மூன்றெரித்(து)
அலையிலங்கும் புனற்கங்கை வைத்தவ்வடி கட்கிடம்
இலையிலங்கும் மலர்க்கைதை கண்டல்வெறி விரவலால்
கலையிலங்குங் கணத்தினம் பொலியுங்கடற் காழியே 7

7. மேருமலையினை இலங்கும் வில்லாகக் கொண்டு அந்த மூன்று மதில்களும் வேகும்படி எரித்தவரும், அலைகள் விளங்குகின்ற நீரையுடைய கங்கையைச் சடையில் வைத்தவருமாகிய சிவபிரானுக்கு இடமாவது (யாதெனின்) மடல்கள் பொலிகின்ற தாழைமலர், நீர்முள்ளி ஆகியவற்றின் மணம் பரத்தலால், கலை என்ற சொல்லால் விளங்கும் மகர மீன்

களின் இனக்கூட்டம் (கரையருகே) காணப்படும் கடலை யுடைய சீகாழியேயாகும்.

அம்மதில் மூன்று — முப்புரத்தசுரரது மூன்று மதில்கள். இலை — இங்குத் தாழை போன்ற மலர்களின் மடல்களைக் குறித்தது. கைதை — தாழை; கண்டல் — நீர் முள்ளி.

கலை — மகர மீன், 'கலை சுறு மீனேறென்ப காட்டிய மகரமாகும்' — சூடாமணி நிகண்டு, இவ்வாறன்றி, கலை யிலங்கும் கணத்தினம் என்பதற்கு 'கல்வி விளங்கும் மறைய வர் கூட்டம்' என்றும், 'மான்களின் கூட்டம்' என்றும் பொருளுரைத்தனர் திருத்தருமபுர ஆதீனக் குறிப்புரை யாசிரியர்.

முழுதிலங்கும் பெரும்பாருள் வாழும்முரண் இலங்கைக்கோன்
அழுதிரங்கச் சிரமுர மொடுங்கவ் வடர்த்தாங்கவன்
தொழுதிரங்கத் துயர்தீர்த் துகந்தார்க்கிட மாவது
கழுதும்புள்ளும் மதிற்புறம தாருங்கடற் காழியே. 8

8. முழுமையாக விளங்கும் பெரிய பூமியுள் வாழ்கின்ற வலிமையுடையவனும், இலங்கைக்கரசனுமான இராவ ணன் (கயிலாய மலையைப் பெயர்த்தபொழுது) அழுது இரங்கும்படி அவனது சிரங்களும் மார்பும் ஒடுங்கும்படி நெருக்கி, அவன் தொழுதிரங்கப் பின் அவனது துயரத்தைத் தீர்த்து உயர்ந்த சிவபிரானது இடமாவது (யாதெனின்) வண்டுகளும் பறவைகளும் மதிற்புறத்தே பொருந்தியிருத் தலையுடைய கடற்காழியாகும்.

முரண் — வலிமை, மாறுபாடு; சிரம் உரம் — சிரமும் உரமும்; உரம் — மார்பு; உகந்தார் — உயர்ந்தவராகிய சிவபிரான்; கழுது — வண்டு.

பூவினுனும் விரிபோதின் மல்குந்திரு மகள்தனை
மேவினுனும் வியந்தேத்த நீண்டாரழ லாய்நிறைந்(து)
ஓவியங்கே அவர்க்கருள் புரிந்தவ்வொரு வர்க்கிடம்
காவியங்கண் மடமங்கையர் சேர்கடற் காழியே. 9

9. தாமரை மலரில் வைகும் பிரமதேவனும், மலர்ந்த தாமரை மலரில் வசிக்கும் திருமகளை விரும்பிய வனான திருமாலும் (அடி முடி காணாது) வியந்து ஏத்தும்படி நிறைந்து பொருந்திய அழற்பிழம்பாய் நீண்டுப் பின்னர் நீங்கி, அவர்களுக்கு அருள் புரிந்த ஒப்பற்ற கடவுளாகிய சிவபிரானார்க்கிடமாவது (யாதெனின்) கருங்குவளை மலர் போன்ற கண்களையுடைய மங்கையர் விரும்பிச் சேர்கின்ற கடற்காழியேயாகும்.

மேவினான் - விரும்பியவன்; ஒவுதல் - நீங்குதல், ஒருவர்-ஒப்பற்றவர்; காவி — கருங்குவளை மலர்.

உடைநவின் றாருடைவிட் டுழல்வாரிருந் தவத்தார்
முடைநவின்றம் மொழியொழித் துகந்தம்முதல் வன்னிடம்
மடைநவின்ற புனற்கெண்டை பாயும்வயல் மலிதரக்
கடைநவின்றந் நெடுமாடம் ஓங்குங்கடற் காழியே. 10

10. உடை உடுத்தலைச் செய்தவர்களாகிய பௌத்தர்களும், உடையினைவிட்டுத் (ஆடையின்றி) திரிந்தவர்களாகிய சமணர்களும் தங்களை விட்டு நீங்காத அவத்தினை உடையோராவர். அத்தகையோரது முடை நாற்றம் பொருந்திய வாய்மொழிகளை ஒழித்து உயர்ந்தவரும், முழு முதற் கடவுளுமாகிய சிவபிரானது இடம் (யாதெனின்) மடைகளினின்றும் பெருகியோடும் நீர் கெண்டை மீன்களுடன் பாய்கின்றவயல்கள் மிகுதலையும் வீடுகளின் வாயிற் கடைகளின் மீது ஆக்கப்பட்ட நெடிய மாடங்கள் ஓங்குதலையுமுடைய கடற்காழியேயாகும்.

உடை நவிலல் — உடை செய்தல் அதாவது உடுத்தலைச் செய்தல். இவ்வாறின்றி உடைநவிலல் என்பதற்கு உடைகளைப்பற்றிய விதிகளைக் கூறுதல். ஒவ்வொரு பிட்சுவுக்கும் அந்தரவாசகம் என்றும், சங்காடி என்றும், உத்தராசங்கம் என்றும் மூன்று காவி ஆடைகள் இருத்தல் வேண்டும். (அந்தரவாசகம் — உள்ளாடை; சங்காடி - அரையில் அணி

யும் ஆடை; உத்தராசங்கம் — மேற்போர்வை) இவை தோய்த்துலர்த்தி உபயோகப்படுத்தற்கு இசைவாக வேறு மூன்று ஆடைகள் வைத்திருக்கலாம்'' என விளக்கினார் இராணிப்பேட்டைப்புலவர் திரு. பி. மா. சோ. அவர்கள்.

இருத்தவத்தார் — இருந்த அவத்தார் எனப்பிரித்துத் தங்களையே இருக்கையாக்கிக் கொண்டு தங்களைவிட்டு நீங்காத அவத்தின் வாய்ப்பட்டோர் எனப்பொருள் கொள்க. அவம் — வீண் செயல்.

கருகமுந்நீர் திரையோத மாருங்கடற் காழியுள்
உரகமாருஞ் சடையடிகள் தம்பாலுணர்ந் துறுதலாற்
பெருகமல்கும் புகழ்பேணுந் தொண்டர்க்கிசை யார்தமிழ்
விரகன்சொன்ன இவைபாடி ஆடக்கெடும் வினைகளே 11

திருச்சிற்றம்பலம்

11. கரிய முந்நீரின் திரையோதம் நிறைந்த கடலைக் கொண்ட சீகாழியுள் (எழுந்தருளிய) பாம்பு பொருந்திய சடையையுடைய அடிகளாகிய சிவபிரானிடம் (அப்பெருமானருளால் அம்மையூட்டிய ஞான போனகத்தால்) உணர்ந்து அந்த (ஞானம்) உறுதலால், எடுத்துரைக்க வார்த்தைகளுக்கு அடங்காததாய்ப் பெருகுமாறு மல்கிய சிவபிரானுடைய புகழைப் பேணும் தொண்டர்களுக்கு, இசை பொருந்திய தமிழ் விரகனாகிய திருஞானசம்பந்தன் சொன்ன இந்தப் பத்து பாடல்களையும் பாடி ஆட வல்லவர்களுக்கு வினைகள் ஆனவை யாவும் கெடும்.

பெருக மல்கும் புகழ் — சொல்லுக்கு அடங்காத பெரும் புகழ். பேணுதல் — மதித்தல், விரும்புதல்.

இசையார் தமிழ் — இசைத்தமிழ்; விரகன் — அறிஞன் வல்லவன். .

முந்நீர் — ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என்ற மூவகை, நீரால் நிரம்புதல் பற்றிக் கடல் முந்நீர் என்ற பெயருடைய

தாயிற்று. இவ்வாறின்றிப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முச்செய்கைகளையுமுடைய நீர் என்று உரை கூறுவாரும் உளர்.

திரை — அலை; ஓதம் — அலை, நீர்ப்பெருக்கு

இத்திருப்பாடல், இறைவனுரருளிய ஞானத்தாலேயே திருஞானசம்பந்தர் யாவையும் ஓதாதுணர்ந்து திருப்பதிகங்கள் பாடினுர் என்பதை அவரது வாக்கினுலேயே அறிவிக்கும் சிறப்புடையதாகும்.

சிவம்.

திருச்சண்பை விருத்தம்—2

திருச்சிற்றம்பலம்

கொங்குதங் குங்குஞ்சி கூடாப் பருவத்துக் குன்றவில்லி
பங்குதங் கும்மங்கை தன்னருள் பெற்றவன் பைம்புணரிப்
பொங்குவங் கப்புனல் சேர்த்த புதுமணப் புன்னையின்கீழ்ச்
சங்குதங் கும்வயற் சண்பையர் காவலன் சம்பந்தனே.

திருச்சிற்றம்பலம்

—நம்பியாண்டார்நம்பி-11ம் திருமுறை

மணம் தங்கும் தலைமயிரையுடைய, மிக்க இளமைப் பருவத்திலே பார்வதி தேவி ஒரு பங்கிலே உறைதலையுடைய மேரு மலையை வில்லாகப் பிடித்த சிவபிரானின் திருவருளைப் பெற்றவன், புதிய மணம் வீசும் புன்னை மரத்தின் கீழ் பொங்குதலையுடைய கடல்நீர் சேர்த்த சங்குகள் தங்குகின்ற வயல்கள் சூழ்ந்த திருச்சண்பையிலுள்ளார்க்குக் காவலனுகிய திருஞானசம்பந்தனேயாவன்.

சிவம்.

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

சீகாழி—10

பண் : கௌசிகம்] திருச்சிற்றம்பலம் [3-ம் திருமுறை

சந்த மார்முலை யாள்தன கூறனார்
வெந்த வெண்பொடி யாடிய மெய்யனார்
கந்த மார்பொழில் சூழ்தரு காழியுள்
எந்தை யாரடி யென்மனத் துள்ளவே. 1

பதிகப்பொழிப்புரை : 1. அழகு பொருந்திய திருமுலை களையுடைய உமாதேவியாரை தனது ஒரு பாகமாகக் கொண்டவரும், திருநீறு நிறையப் பூசிய திருமேனியை உடையவரும், மணம் நிறைந்த பொழில் சூழ்ந்த சீகாழியுள் எழுந்தருளிய எனது தந்தையாருமாகிய சிவபிரானின் திருவடிகள் எனது மனத்தில் பொருந்தியுள்ளன.

சந்தம் — அழகு; தன — தன்னுடைய; கூறு — பாகம்

வெந்த வெண்பொடி — திருநீறு; ஆடுதல் — உடல் நிறையப் பூசுதலைக் குறித்தது.

மானி டம்முடை யார்வளர் செஞ்சடைத்
தேனி டங்கொளுங் கொன்றையந் தாரினார்
கானி டங்கொளுந் தண்வயற் காழியார்
ஊனி டங்கொண்டென் உச்சியில் நிற்பரே. 2

2. மான் போன்ற (நோக்கினையுடைய) உமாதேவி யாரை இடது பாகத்திலே உடையவரும், வளர்தலையுடைய சிவந்த சடைமுடியின் மீது தேன் இடங்கொள்ளுகின்ற கொன்றைமலர் மாலையணிந்தவரும், மணம் பரவுதலை உடைய குளிர்ச்சி பொருந்திய வயல்களையுடைய சீகாழியில் எழுந்தருளியிருப்பவருமான சிவபெருமான் இந்த உடலை இடமாகக் கொண்ட எனது உச்சியில் நிற்பர்,

மான் — மான் போலும் மருண்ட பார்வையுடைய தேவியாரைக் குறித்தது. "மானினேர் விழி மாதராய்" என்று பிள்ளையார் பாண்டிமாதேவியை முன்னிலைப் படுத்திப் பாடியுள்ளார். திருக்கழிப்பாலையில் பாடிய வெந்த குங்கிலியப்புகை எனத்தொடங்கும் பதிகம் இரண்டாவது பாடலிலும் 'மானலம் மடநோக்குடையாளொடே' என உமாதேவியாரைப் பாடியுள்ளார். இன்னும் பல உள. "மானேர் நோக்கி மணவாளா" "மானேர் நோக்கி உமையாள் பங்கா", என்று வருவதைத் திருவாசகத்திலும் காணலாம். 'மான்' என்றே பெண் அழைக்கப்படுதலை 'மானே நீ நென்னலை.........' என வரும் திருவெம்பாவைப் பாடலினால் அறியலாம். இவ்வாறின்றி 'மானிடங்கொண்டு' என்பதற்கு மானை இடப்பக்கத்தில் ஏந்தி என்று உரைத்தனர் திருத்தருமையாதீனக் குறிப்புரையாசிரியர்.

கான் — வாசனை, வயல்களின் அருகே உள்ள பொழில்களினின்றும் மணம் பரவுதலால் கானிடங்கொளும் தண்வயல் என்றருளினார்.

ஊன் — உடம்பு. ஊனிடங்கொண்டென் உச்சியில் நிற்பரே என்பது "எந்தையே, ஈசா, உடலிடங் கொண்டாய்" என வரும் திருவாசகத்திலும் வருவது போல இறைவர் அடியாரது ஊனுடலைத் தனக்கு உரிய இடமாகக்கொண்டு அருள் செய்யுந் தன்மையைக் குறிக்கும். இறைவர் அடியாரது உடலிடங் கொள்வதன் புறச்சின்னமே திருநீறும் உருத்திராக்கமும் அணிவதன் மெய்ப்பொருளாகும்.

"திருந்தடி மறக்குமாறிலாத வென்னை மையல் செய்திம்மண்ணின் மேல் பிறக்குமாறு காட்டிய" (திருஞானசம்பந்தர், திருத்துருத்திப்பதிகம், 5ம் திருப்பாடல்) ஆணைப்படி "நிணங்காட்டும் கொட்டிலாகிய" இவ்வுடம்பினிடம் கொண்ட என் உச்சியில் நிற்பவன் என்க. "மனத்தகத்தான் தலைமேலான் வாக்கிலுள்ளான்" என வரும் அப்பர் அருள் மொழி காண்க. (இராணிப்பேட்டை புலவர் திரு. பி. மா. சோமசுந்தரனூர் அவர்களது விளக்கம்)

மைகொள் கண்டத்தர் வான்மதிச் சென்னியர்
பைகொள் வாளரவாட்டும் படிறனார்
கைகொள் மான்மறி யார்கடற் காழியுள்
ஐயன் அந்தணர் போற்ற இருக்குமே. 3

3. கருமை நிறம் கொண்ட கழுத்தையுடையவரும், வானிலே உலவும் சந்திரனின் பிறையை அணிந்த தலையினை உடையவரும் படத்தினைக் கொண்ட பாம்பினை ஆட்டும் படிறரும்; கையினிலே கொண்ட மான்கன்றினையுடையவருமாகிய தலைவனாகிய சிவபெருமான் அந்தணர்கள் போற்றச் சீகாழியுள் எழுந்தருளியிருப்பர்.

படிறர் — வஞ்சகர். இறைவர் தமது தன்மை இன்னதென முழுமையாய்த் தோற்றாத நிலையில் இருத்தலால் வஞ்சகர் எனக் கூறப்பட்டனர் போலும். திருவுருத்திரத்திலும் வஞ்சக: பரிவஞ்சக: என வருதல் காண்க.

அரவு ஆட்டுதல் — சென்னியிலும், மார்பிலும், இடையிலும் பாம்புகள் ஆடும்படி இறைவர் வருதலால் இங்ஙனம் கூறியருளியதாகக் கொள்க. இதுபற்றி தமிழ்மாலை-9, பக்கம் 73ல் கூறப்பட்டதை இங்கும் கொள்க.

அந்தணர் — சீகாழி வேதியர்கள். இவர்கள் சிவபிரானைப் போற்றிய திறத்தினை அடிக்கடித் தமது பதிகங்களில் பிள்ளையார் கூறுதல் காண்க. இவ்வாறின்றி அந்தணர்கள் என்பதற்கு முனிவர் என்று பொருளுரைத்தனர் திருத்தருமையாதீனக் குறிப்புரையாசிரியர்.

புற்றில் நாகமும் பூளையும் வன்னியுங்
கற்றை வார்சடை வைத்தவர் காழியுள்
பொற்றொ டியொ டிருந்தவர் பொற்கழல்
உற்ற போதுடன் ஏத்தி உணருமே. 4

4. புற்றில் வாழும் பாம்பையும், பூளை எனப்படும் ஒருவகைப்பூவையும், வன்னிமரத்தின் தழையையும் தமது

கற்றையான நீண்டதுமான சடைமேல் வைத்தவரும், சீகாழியுள் உமாதேவியாரோடு வீற்றிருந்தவருமாகிய சிவ பிரானின் பொன் போலும் பொலிகின்ற திருவடிகளைச் சமயம் வாய்த்தபொழுது (காலங்கடத்தாது) உடனேயே துதித்து தியானித்திருங்கள்.

காழியுள் பொற்றொடியோடிருந்தவர் — சீகாழித் திருத் தோணிபுரத்து பெரியநாயகிப் பிராட்டியாருடன் எழுந் தருளியிருக்கும் திருத்தோணியப்பர். (உமாமஹேச்சுவரர்)

பொற்றொடி — பொன்னாலாகிய வளையல்களையணிந்த பிராட்டியார். பொற்கழல்—அழகிய கழல்கள் எனக்கொள்க.

ஏத்துதல் — துதித்தல். உணருதல் — தியானித்தல், சிந்தித்தல்.

நலியுங் குற்றமும் நம்முடல் நோய்வினை
மெலியு மாறது வேண்டுதி ரேல்வெய்ய
கலிக டிந்தகை யாற்கடற் காழியுள்
அலைகொள் செஞ்சடை யாரடி போற்றுமே. 5

5. நமது (மனத்தை) வருத்துகின்ற குற்றங்களும், நமது (உடலை) வருத்துகின்ற பிணிகளாகிய தீவினைகளும் மெலிந்து ஒழிகின்ற அந்த வழியை விரும்புவீராயின், கொடுமையான கலியுகத்தின் துன்பத்தைத் தமது எரி யோம்புதலால் ஓட்டிய கைகளையுடைய அந்தணர்களது கடற்காழியுள் அலைகளையுடைய கங்கை நதியைக் கொண்ட செஞ்சடையானாகிய சிவபிரானது திருவடிகளைப் போற்றி செய்யுங்கள்.

நலியும் — வருத்தும்; மெலியும் — தேய்ந்து ஒழியும்,

கலிகடிந்தகையார் — தமது கைகளால் செய்யப்படும் எரியோம்புதலால் கலியின் கொடுமையை ஓட்டுபவர்களா கிய சீகாழி அந்தணர்கள். அந்தணர்கள் தற்பொழுது எரி யோம்புதலைக் கைவிட்டுவிட்டதனால் கலியின் கொடுமை

அதிகமாகிவிட்டதென அறிக. இது பற்றி முன் வந்துள்ள இடங்களில் கூறியதையும் இங்கு நினைவிற்கொள்க.

போற்றுதல் — துதித்து வணங்குதல். அலை — இங்கு அதனையுடைய கங்கையைக் குறித்தது.

பெண்ணொர் கூறினர் பேயுடன் ஆடுவர்
பண்ணும் ஏத்திசை பாடிய வேடத்தர்
கண்ணு மூன்றுடை யார்கடற் காழியுள்
அண்ண லாய அடிகள் சரிதையே. 6

6. உமாதேவியாரை ஒரு பாகமாக உடையவரா யிருத்தல், பேயுடன் ஆடுபவராயிருத்தல், நல்ல பண்களை உலகத்தார் போற்றும் ஏழிசைகளுடன் பாடிய வேடத்தரா யிருத்தல் இவை கடலையுடைய சீகாழியில் மூன்று கண்களை யுடைய தலைவராகிய சிவபிரானது புகழ்களாகும்.

இறைவரது திருக்கோலங்கள் ஒவ்வொன்றுக்கும் வர லாறு இருத்தலால் 'சரிதையே' எனக்கூறினர். ஒவ்வொரு வரலாறும் இறைவருடைய புகழையே பேசும் என்பதாம். சரிதை — நல்லநடை, புகழ் எனக்கொள்க.

பற்று மானும் மழுவும் அழகுற
முற்று மூர்திரிந் துபலி முன்னுவர்
கற்ற மாநன் மறையவர் காழியுள்
பெற்ற மேற துகந்தார் பெருமையே. 7

7. கையினிலே பற்றுகின்ற மானும் மழுவும் அழகாக விளங்கும்படி, ஊர் முழுவதும் திரிந்து பிச்சையெடுப்பதற்கு முற்படுவர். நூல்களைக் கற்றவர்களும், பெருமையுடைய வர்களும், நல்லவர்களுமாகிய மறையவர்கள் வாழும் சீகாழியில் எருதினை ஊர்தியாக விரும்பிய சிவபிரானாரது பெருமை இத்தன்மைத்தாகும்.

உலக இயலில் பிச்சைத் தொழில் இழிவானதாயிருப்ப, இறைவரது பிச்சைத் தொழில் அவ்வாறின்றிப் பெருமை யுடைத்தேயாகும் எனக் கூறியருளினார். முன் பதிகத்தில்

''விருகிலங்கும் சரிதைத் தொழிலாளர்'' என்று கூறியருளி யதுங் காண்க.

எடுத்த வல்லரக் கன்முடி தோளிற
அடர்த்து கந்தருள் செய்தவர் காழியுள்
கொடித்த யங்குறற் கோயிலுள் இன்புற
இடத்து மாதொடு தாமும் இருப்பரே. 8

8. திருக்கயிலையைப் பெயர்த்தெடுத்தலில் முயன்ற வலிமையுடைய அரக்கனாகிய இராவணனது சிரமும், தோள்களும் முரியும்படி நெருக்கிப் பின் (அவனது சாம கானத்தால்) மகிழ்ந்து அருள் செய்தவராகிய சிவபிரான் சீகாழியுள் கொடி (துவஜம்) விளங்குகின்ற அழகிய திருக் கோயிலுள் தமது இடப்புறத்தில் தேவியாரோடு தாமு மாய் வீற்றிருப்பார்.

காலன் தன்னுயிர் வீட்டு கழலடி
மாலு நான்முகன் தானும் வனப்புற
ஓல மிட்டுமுன் தேடி உணர்கிலாச்
சீலங் கொண்டவ னூர்திகழ் காழியே. 9

9. இயமனது உயிரைப் போக்கிய திருவடியைத் திரு மாலும், பிரமதேவனும் நன்றாகத் தேடி ஓலமிட்டும் அறிய வொண்ணாத பெருமையைக் கொண்டவனாகிய சிவபிரானது ஊர் விளக்கத்தையுடைய சீகாழியேயாகும்.

உருவ நீத்தவர் தாமும் உறுதுவர்
தருவ லாடையி னுருந் தகவிலர்
கருமம் வேண்டுதி ரேற்கடற் காழியுள்
ஒருவன் சேவடி யேயடைந் துய்ம்மினே. 10

10. (தமது சமய ஒழுக்கத்தின் பயனாய்) உடல் நிறம் நீத்துக் கரியவுருவான சமணர்களும், துவர் நிறம் மிகுதியாக ஊட்டப்பட்ட வலிய ஆடையினை உடுப்பவர்களாகிய பௌத்தர்களும் நன்மையடையவர்களல்லர். நல்ல காரியம்

செய்ய வேண்டுமென்று விரும்பினீர்களேயானால் கடற்காழியுள் ஒப்பற்ற பெருமானாகிய சிவபிரானது சேவடிகளையே சரணடைந்து நற்கதி பெறுவீர்களாக.

உருவரிந்தவர் — தமது சமய ஒழுக்கத்தின்படி வெயிலில் நின்று தம் இயற்கை நிறம் மாறி கருமை நிறமாக மாறப் பெற்றவர்.

துவர் — ஒரு வகைப் பழுப்பு நிறம். உறுதுவர் — மிக்க துவர் நிறம். வல் ஆடை — முரட்டுப் போர்வை. தகவு — அறிவு, உரிமை, ஒழுக்கம், கிருபை, குணம், தகுதி, தெளிவு, நன்மை, நீதி முதலிய பொருள்களைத் தருவது இச்சொல். எனவே தகவிலர் என்றதால் இவைகளில் ஒன்றுகூட இல்லாதவர்கள் சமணர்களும் பௌத்தர்களும் எனக்கொள்க.

கருமம் — இங்கு மனிதப் பிறவியடைந்தவர் யாவரும் செயத்தக்க கருமம். ''மானிடப்பிறவிதானும் வகுத்தது மனவாக்காயம், ஆனிடத்தைந்துமாடும் அரன்பணிக்காக வன்றோ.......'' என்ற சிவஞானசித்தியார் வாக்குப்படி சிவபிரானைப் பூசித்தலே மானிடர்கள் செய்ய வேண்டிய காரியம் ஆகும்.

''எது சிவபிரானைப் பேசுகிறதோ (துதிக்கின்றதோ) அதுவே நாக்கு, எவைகள் சிவபெருமானைத் தரிசிக்கின்றனவோ அவைகளே கண்கள், எவைகள் சிவபிரானை அருச்சிக்கின்றனவோ அவைகளே கரங்கள், எவன் எப்பொழுதும் சிவபிரானைத் தியானிக்கின்றானோ அவனே செய்ய வேண்டிய கருமத்தைச் செய்தவனாவான்'' என்பது ஆதிசங்கர பகவத்பாதாசார்யர்களின் அருமைத் திருவாக்கு (சிவானந்த லஹரீ.94)

''செய்தக்கவல்ல செயக்கெடும், செய்தக்க செய்யாமையானுங்கெடும்'' என்ற குறளின்படி - ''பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்'' என்ற பெருமான்

வாக்கே அவர் குறித்த கருமம் ஆகும். இது இராணிப் பேட்டை புலவர் திரு. பி. மா. சோ. அவர்களது விளக்கம்.

ஒருவன் — ஏக: என்னும் வடமொழிச் சொல்லின் பொருளைத் தரும் தமிழ்ச்சொல். "ஒருவன் என்னும் ஒருவன் காண்க" என்பது திருவாசகம், திருவண்டப் பகுதி 43). ஒரு முழு முதல்வன் என்று சொல்லப்படும் ஒப்பற்றவன் என்பதுபொருள்.

கானல் வந்துல வுங்கடற் காழியுள்
ஈன மில்லி இணையடி ஏத்திடும்
ஞான சம்பந்தன் சொல்லிய நற்றமிழ்
மான மாக்கும் மகிழ்ந்துரை செய்யவே. 11

திருச்சிற்றம்பலம்

11. கடற்கரைச் சோலைகளினின்றும் நறுமணம் வந்துலவும் கடற்காழியுள் அழிவற்றவராகிய சிவபெருமானாரது இரண்டு திருவடிகளையும் துதித்திடும் திருஞானசம்பந்தன் சொல்லிய நன்மை பயக்கும் தமிழ்ப் பதிகத்தை, மனமகிழ்ச்சியுடன் பாட (அவ்வாறு பாடுவோருக்கு) பெருமையை உண்டாக்கும்.

கானல் — கடற்கரைச்சோலை. 'வந்து உலவும்' என்று அருளியதால் அச்சோலையின் நறுமணம் வந்து உலவுகின்ற கடற்காழி எனப்பொருள் கொண்டோம்.

ஈனம் — அழிவு, கேடு, குறைபாடு என்பன போன்ற பொருள்கள். எனவே ஈனமில்லி என்பதற்கு அழிவற்றவர் அதாவது சாச்வதமானவர் என்ற பொருள் கொள்ளப் பட்டது.

நற்றமிழ் — நற்பயன்களைப் பயக்கும் தமிழ்.

மானம் — பெருமை. அது இங்கு வீடு பேற்றைக் குறிக்கும் என்பது திருத்தருமையாதீனக் குறிப்புரை.

சிவம்.

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

திருப்புறவம்—1

பதிகவரலாறு: சீகாழித் தலத்தின் பன்னிரு திருப்பெயர்களில் ஒன்று திருப்புறவம் என்பதாகும். சிபிச்சக்கரவர்த்தியின் அருள்தன்மையைப் பரிசோதிக்கப் புறாவடிவங்கொண்டுவந்த அக்கினிதேவன் பூசித்தமையால் திருப்புறவம் எனப் பெயர் வழங்கலாயிற்று. இப்பெயரில் திருஞானசம்பந்தர் பாடியருளியவை மூன்று திருப்பதிகங்களாகும். அவற்றுள், பாடியருளிய காலமும் வரலாறுந் தெரிந்த நறவ நிறை எனத்தொடங்கும் தக்கேசிப் பண்ணில் அமைந்த திருப்பதிகம் நமது நான்காவது தமிழ் மாலையில் முன்னமேயே பிரசுரிக்கப்பட்டுள்ளது. பாடியருளிய காலமும் வரலாறும் தெரியாத எஞ்சிய இரண்டு பதிகங்களும் இந்த மலரில் கொடுக்கப்பட்டுள்ளன.

பண்: குறிஞ்சி] திருச்சிற்றம்பலம் [1-ம் திருமுறை

எய்யாவென்றித் தானவரூர்மூன் றெரிசெய்த
மையார்கண்டன் மாதுமைவைகுந் திருமேனிச்
செய்யானவெண்ணீ றணிவான் திகழ்பொற் பதிபோலும்
பொய்யாநாவின் அந்தணர்வாழும் புறவம்மே 1

பதிகப்பொழிப்புரை: 1. வெற்றியடையாத அசுரர்களது முப்புரங்களையும் எரித்த விடம் பொருந்திய கழுத்தையுடையவனும், உமாதேவியார் ஒரு பாகமாக வசிக்கும் திருமேனியையுடைய செந்நிறமுடையவனும், வெண்ணீறு அணிபவனும் ஆகிய சிவபிரான் விளங்குகின்ற அழகிய திருத்தலம், பொய்யை சொல்லாத நாவினையுடைய அந்தணர்கள் வாழ்கின்ற திருப்புறவம் ஆகும்.

எய்யா வென்றி — வென்றி எய்யா என மாற்றி வெற்றியை அடையாத எனப் பொருள் கொள்ளப்பட்டது.

வென்றி — வெற்றி. எய்தல் — அடைதல்; தானவர் — அசுரர்; மை — விடம்.

செய்யான் — செந்நிறம் உடையவன்; பிறப்பென்னும் பேதைமை நீங்கக் காணவேண்டிய சிறப்பென்னும் செம்பொருள் ஆனவன் என்றும் பொருள் கொள்ளலாம்.

பொய்யா நாவின் அந்தணர் — 'ஸத்யம் வத' என்ற வேத வாகவின்படி என்றும் உண்மையே பேசுபவர்கள்; அல்லது அவர்கள் வாக்கு என்றும் பொய்படாது சொன்னது சொன்னபடியே நடக்கும் தன்மையுடைய நாவினை யுடையவர் என்றும் கொள்ளலாம்.

போலும் — ஐயப்பாட்டைக் குறிக்கும் இசைநிறை அசைச்சொல். இங்கு உடன்பாட்டைக் குறித்தது. சிவ பிரான் பதி திருப்புறவம் என்பதில் ஐயம் ஏதுமில்லை யன்றோ?

மாதொருபாலும் மாலொருபாலும் மகிழ்கின்ற
நாதனென்றேத்தும் நம்பரன்வைகுந் நகர்போலும்
மாதவிமேய வண்டிசைபாட மயிலாடப்
போதலர்செம்பொன் புன்னைகொடுக்கும் புறவம்மே. 2

2. உமாதேவியார் ஒரு பாகமாக வைகும் அர்த்த நாரீசுவர மூர்த்தத்தையும், திருமால் ஒரு பாகமாகும் அரி யர்த்த மூர்த்தத்தையும் மகிழ்ந்து கொள்ளுகின்ற தலைவன் என்று (அடியார்கள்) துதித்து வணங்குகின்ற, எல்லோர்க் கும் மேலானவனுகிய நமது சிவபிரான் விரும்பி உறைகின்ற நகர், குருக்கத்திப் பூக்களில் பொருந்திய வண்டுகள் இசை பாட (அவ்விசைக்கேற்ப) மயில்கள் ஆடப் புன்னை மரம் தனது பூக்கள் மலர்தலால் உதிரும் தாது ஆகிய (மகரந்தம்) செம்பொன்னைக் கொடுக்கும் திருப்புறவம் ஆகும்.

மாதொருபால், மாலொருபால் என்பன முறையே உமாதேவியாரை இடப்பாகத்தே கொண்ட அர்த்தநாரீசு வரத் திருக்கோலத்தையும், திருமாலை இடப்பக்கத்தே

கொண்ட அரியர்த்த மூர்த்தத்தையும் குறிப்பனவாம். இவ்விரண்டும் இறைவனது இருபத்தைந்து மாகேசுவர மூர்த்தங்களில் அடங்குவனவாம். இவ்விரு மூர்த்தங்களையும் இறைவர் மகிழ்ந்து கொள்ளுகின்றார் என்று திருஞான சம்பந்தர் போற்றியருளினர் என்பதே இத்திருப்பாடலின் முதல் அடி நமக்கறிவிக்கும் செய்தியாகும். இவ்வாறின்றி, "ஒரு பாதி உமையும் ஒரு பாதி மாலுமாக இருக்கும் நாதன்" என உரை கூறினர் திருத்தருமபுரக் குறிப்புரையா சிரியர். இதன் பொருத்தம் ஆராய்ச்சிக்குரியதாகும். ஒரே சமயத்தில் ஒரு பாதி உமையும் ஒரு பாதி மாலுமாக இருக்கும் மூர்த்தம் ஒன்று உளது என்பது இதுகாறும் யாம் கேட்டறியாததாகும். உரையாசிரியரும் இதற்குரிய சான்று ஏதுங்காட்டினாரில்லை. எனவே இரண்டும் தனித்தனி மூர்த் தங்கள் என்று கொள்வதே பொருத்தமானது.

நம்பரன் — நமது பரன்; பரன் — எல்லார்க்கும் மேலா னவன். மாதவி — குருக்கத்தி

மாதவிப் பூக்களைச் சேர்ந்த வண்டுகள் பறக்கும்போது ஒலி உண்டாகிறது. இதனை வண்டுகளின் இரீங்காரம் என் பர். இதனையே வண்டுகள் இசைபாட என்றருளிச் செய் தார். மயில்கள் ஆடுகின்றன புன்னை மரத்தின் மொட்டு கள் மலர்தலால் அவற்றினின்றும் பொன்னிறம் பொருந் திய பூந்தாதுக்கள் உதிர்கின்றன. இவை யாவும் இயற்கை நிகழ்ச்சிகளே. இவற்றை ஒன்றற்கொன்று தொடர்பு படுத்தி வண்டுகள் இசை பாடுவதாகவும் அவ்விசைக்குத் தக்கபடி மயில்கள் ஆடுவதாகவும், பாடலைக் கேட்டும் ஆடலைக் கண்டும் மகிழ்ந்த புன்னை மரமாகிய வள்ளல் தனது மலர்களாகிய கைகளால் பூந்தாதுக்களாகிய செம் பொன்னை வாரி வழங்குவதாகவும் திருஞானசம்பந்தப் பெருமானார் கூறியருளியது சிறந்ததொரு கற்பனை நய மாகும். எல்லோர்க்கும் மேலானவனாகிய சிவபிரான் கோயில் கொண்ட ஊரின் புன்னை மரமே வண்டின் பாடலை

யும் மயிலின் ஆடலையும் மகிழ்ந்து செம்பொன்னை வழங்கு மாயின், அவ்விறைவன் தன்னைப் பாடியும் ஆடியும் ஏத்தும் தன்னடியார்களுக்குச் செம்மைப் பொருளாகிய வீடு பேறு வழங்குதலில் ஐயமும் உண்டோ? இவ்வுண்மையைப் பின்னிரண்டடிகளால் பெற வைத்த ஞானத்தமிழாகரரின் பொன்னடிகளைப் போற்றி உய்வோமாக.

வற்ருநதியும் மதியும்பொதியுஞ் சடைமேலே
புற்ருரவின் படமாடவுமிப் புவனிக்கோர்
பற்ருயிடுமின் பலியென்றடைவார் பதிபோலும்
பொற்ருமரையின் பொய்கைநிலாவும் புறவம்மே. 3

3. என்றும் வற்ருத நீர்ப்பெருக்கையுடைய கங்கை நதியும் பிறைச்சந்திரனும் பொதிந்துள்ள சடையின் மேல் புற்றுகளில் பொருந்திய பாம்புகளின் படம் ஆடும்படி, உலகங்களில் உள்ள உயிர்கள் யாவும் உய்வதற்குப் பற்றப்படும் ஒப்பற்ற பற்றுக்கோடாய பரம்பொருளாய், இல்லங்கள் தோறும் வந்து 'பலியிடுமின்' என்று அடைபவராகிய சிவபிரானுரது பதி, பொன் போலும் ஒளி செய்யும் தாமரை மலர்கள் நிறைந்த பொய்கை விளங்குகின்ற திருப்புறவம் ஆகும்.

வற்ருநதி — ஜீவநதியாகிய கங்கை; பொதிதல் — கட்டுதல், அடைத்தல், மறைத்தல்.

புவனி — உலகம், ஆகுபெயராய் உலகத்து உயிர்களைக் குறித்தது. ஓர் பற்று — ப்ற்று வைத்தற்குரிய ஒரே பொருள். பலி — பிச்சை.

பொற்ருமரையின் பொய்கை — சீகாழித் திருக்கோயிலுள் உள்ள பிரமதீர்த்தம் என்னும் அழகிய திருக்குளம்.

துன்ஞர்புரமும் பிரமன்சிரமுந் துணிசெய்து
மின்ஞர்சடைமேல் அரவும்மதியும் விளையாடப்
பன்ஞளிடுமின் பலியென்றடைவார் பதிபோலும்
பொன்ஞர்புரிநூல் அந்தணர்வாழும் புறவம்மே. 4

4. பகைவரது முப்புரத்தையும் பிரமதேவனது சிரத்தையும் அழித்து, மின்னல் போல் ஒளிரும் சடையின் மேல் பாம்பும் பிறைச்சந்திரனும் விளையாடும்படி, பலியிடுங்கள் என்று பல நாட்கள் வந்து அடைபவராகிய பரமசிவனாரது பதி, பொன் போலும் அழகிய பூணூல் அணிந்த அந்தணர்கள் வாழும் திருப்புறவம் ஆகும்.

துன்னார் — பகைவர்; துணிசெய்தல் — துண்டு செய்தல் அறுத்தல், புரம் துணி செய்து என்பதற்குப் புரத்தை அழித்து எனப்பொருள் கொள்ளப்பட்டது.

தேவாஅரனே சரணென்றிமையோர் திசைதோறுங்
காவாயென்று வந்தடையக்கார் விடம்உண்டு
பாவார்மறையும் பயில்வோருறையும் பதிபோலும்
பூவார்கோலச் சோலைசுலாவும் புறவம்மே. 5

5. தேவர்கள் "தேவதேவனே சரணம்" என்று அரற்றி திசைகள் தோறும் ஓடி வந்து "எங்களைக் காப்பாய்" என்று அடைக்கலம்புக, கரிய விஷத்தைத் தானுண்டு (தேவர்களைக் காப்பாற்றியருளிய) பாக்கள் பொருந்திய வேதங்களைச் சொல்லுதலையுடைய சிவபிரான் உறைகின்ற தலம், பூக்கள் நிறைந்த அழகியசோலைகள் சூழ்தலையுடைய திருப்புறவம் ஆகும்.

சிவபிரான் விடமுண்டு தேவர்களைக் காத்தருளிய வரலாறு ஸ்காந்தம் முதலிய சைவபுராணங்களில் மட்டுமன்றி, வைணவர்கள் மாபாரதத்தினும் மிக உயர்ந்ததாகக் கொண்டாடுகின்ற இராமாயணத்திலும் காணலாம். வால்மீகி இராமாயணம் பால காண்டம் 45-ம் சருக்கத்தில், தேவர்களும் தைத்தியர்களும் சாவாமருந்தாகிய அமிர்தம் பெறும் பொருட்டு ஒருங்கு கூடிச்சென்று திருப்பாற்கடலைக் கடைய, அதன்கண் வாசுகி உகுத்த நஞ்சு பெருகி அங்கே குழுமிய தேவர்கள் முதல் அனைவரையும் அழிக்கப் புக்கமை கண்டு அவர்களெல்லோரும் பெரிதும் நடுக்குற்றுச் சிவபிரானை அடைக்கலம் புகுந்து "எல்லாம் வல்ல பெருமானே

எம்மைப் பாதுகாத்தருள்க, எம்மைப் பாதுகாத்தருள்க!" என்று குறையிரந்தமையும் அங்ஙனமே விஷ்ணுவும் சிவபிரானை நோக்கி, "தேவரீரே எல்லாத் தேவர்கட்கும் முன் உள்ளீர், நீரே எல்லாத் தேவருள்ளும் சிறந்த தலைவராயினீர் ஆதலால் எல்லார்க்கும் வருவதில் முதற் பங்கு தேவரீரையே சாரற்பாலதாகலின், பெருமானே! முதற்கண் வந்ததாகிய இந்நஞ்சினைப் பருகியருளும்" என வேண்டினமையும், அவ்வாறே அவ்விருதிறத்தார் கலக்கத்தையுங் கண்டு இரங்கிச் சிவபிரான் அந்நஞ்சினையே அமிர்தமாகப் பருகி அதனால் தான் ஏதுந்துன்புறாது தேவர் துயர் களைந்தருளினமையும் நன்கெடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. விஷ்ணு சிவபிரானை வேண்டிய இவ்வுரை வடமொழியில் பின்வருமாறு உள்ளது.

"தைவதைர் மத்யமானேது யத்பூர்வம் ஸமுபஸ்திதம் |
தத்த்வதீயம் ஸுரச்ரேஷ்ட ஸுராணும் அக்ரதோ ஹி யத்
அக்ரபூஜாம் இஹ ஸ்தித்வா க்ருஹாணேதம் விஷம்
ப்ரபோ |

—(வால்மீகி இராமாயணம், பாலகாண்டம், 45-ம் சருக்கம், சுலோகம் 23-24)

இவ்வாறு தவத்திரு மறைமலையடிகளார் தமது "மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்" (கழக வெளியீடு) என்ற அரிய ஆராய்ச்சி நூலின் இரண்டாவது பகுதி 19-ம் அத்தியாயத்தில் கூறியுள்ளார்கள். (மேற்படி இராமாயண சுலோகத்தில் திருமால் சிவபிரானை "ப்ரபோ" என்று விளித்ததாக வால்மீகி கூறியுள்ளது கண்டு கொள்க சிவபிரானே முழு முதற் கடவுள் என்பதே வால்மீகி முனிவரின் உள்ளக் கிடக்கையாம் என்பதும் இதனால் தெளிக.)

கற்றறிவெய்திக் காமன்முன்னாகும் முகவெல்லாம்
அற்றரனேநின் னடிசரணென்னும் அடியோர்க்குப்
பற்றதுவாய பாசுபதன்சேர் பதியென்பர்
பொற்றிகழ்மாடத் தொளிகள்நிலாவும் புறவம்மே. 6

6. நூல்களையெல்லாங் கற்று அதனால் அறிவைப் பெற்று (அவ்வறிவு பெற்றதன் பயனாய்) காமனை (மன்மதனை) முன்னாகக் கொண்ட (சிற்றின்ப) நுகர்ச்சி யெல்லாம் அறவேயொழிந்து "அரனே! நினது திருவடிகளே எங்களது புகலிடம்" என்று அடைக்கலம் புகும் அடியவர் களுக்குப் பற்றாய் விளங்கும் பாசுபதனாகிய சிவபிரான் எழுந் தருளிய பதி அழகு திகழ்கின்ற மாடங்களில் ஒளிகள் விளங் கும் இருப்புறவம் என்று கூறுவர்.

காமன் — மக்களுக்குச் சிற்றின்ப உணர்ச்சி உண்டா வதற்குக் காரணமானவன் என்று கூறப்படும் மன்மதன்.

முகவு—மொள்ளுதல், நீர்வேட்கையால் குடத்திலிருந்து நீர் மொள்ளுதலைப் போலக் காமனை முன்கொண்டு மொள்ளும் சிற்றின்பநுகர்ச்சி எனல் முகவு என்பதற்குப் பொருளாகும். இவ்வாறின்றி முகவு என்பதற்கு முகவொளி என்று பொருள் கூறினர் திருத்தருமையாதீனக் குறிப்புரை யாசிரியர். முகவொளி கெட்ட பிறகே அடியார்கள் இறை வனைச் சரண்புகுகின்றனர் எனக்கூறுதல் அடியார்களுக்கு இழுக்காதலின் அப்பொருள் ஈண்டுப் பொருந்தாது என்று அறிக.

பற்றதுவாய பாசுபதன் — அடியார்கள் பற்றுவைத்தற் குரிய ஒரே பெருமானாகிய பாசுபதன். பற்று — அன்பு, பற்றதுவாய — 'பற்றுக் கோடாகிய' எனக்கொண்டால் ஆதாரம், ஊன்றுகோல் என்ற பொருள்களைக் கொள்க. இறைவனே அடியார்களுக்கு ஆதாரம் என்பதாம்.

பாசுபதன் — சிவபிரானே உயிர்க்கூட்டங்கள் அனைத் துக்கும் தலைவர் என்ற பொருள் தரும் பசுபதி என்ற பெயர்ச் சொல்லடியாகப் பிறந்த பெயர். பசுபதியின் தொடர்புடையது பாசுபதம். அதன் தலைவன் பாசுபதன். பாசுபதம் என்பது பசுபதியை இறைவனாகக் கொண்ட ஒரு படைக்கலம், சிவபிரானால் அருச்சுனனுக்குக் கொடுக்

சப்பட்டது. பாசுபதம் என்பது அகப்புறச்சமயம் ஆறனுள் ஒன்றையும் குறிக்கும்,

எண்டிசையோரஞ் சிடுவகைகார்சேர் வரையென்னக்
கொண்டெழுகோல முகில்போற்பெரிய கரிதன்னைப்
பண்டுரிசெய்தோன் பாவனைசெய்யும் பதியென்பர்
புண்டரிகத்தோன் போன்மறையோர்சேர் புறவம்மே. 7

7. எட்டுத் திசைகளில் உள்ளவர்களெல்லாம் அச்சமடையும்படி கரியமலையென்று சொல்லும்படி மேகம்போல உருவம் கொண்டுவந்த பெரிய யானையினை முற்காலத்தில் உரித்துப் போர்த்தவனாகிய சிவபிரான் விரும்பியிருக்கும் பதி, பிரமதேவனைப் போன்ற (சிறப்புடைய) வேதியர்கள் இடைவிடாது தியானித்தலையுடைய திருப்புறவம் ஆகும்.

கார்சேர்வரை — கருமை நிறம் சேர்ந்தமலை, கரியமலை.

இரண்டாவது அடிக்கு "முகில் போற் கோலங் கொண்டெழு பெரிய கரிதன்னை" என்று கொண்டு கூட்டிப் பொருள் கூறப்பட்டது. இங்கு கோலம் என்ற சொல்லுக்கு உருவம் என்ற பொருள் கொள்ளப்பட்டது. இவ்வாறின்றி, கோலமுகில்போல் என்று கொண்டு 'அழகிய மேகத்தைப் போல' எனப் பொருளுரைத்தனர் திருத்தருமையாதீனக் குறிப்புரையாசிரியர். முதல்அடியில் உள்ள அஞ்சிடும் வகை என்பதனோடு இப்பொருள் முரண்படுதலால் இம்மாதிரி உரைத்தல் பொருந்தாது எனக்கொள்க.

பாவனை செய்யும் — எண்ணம் (சிந்தை) செய்யும் என்று கொண்டு விரும்புதலைச் செய்யும் என உரைக்கப் பட்டது.

புண்டரிகத்தோன் — தாமரை மலரை இருக்கையாகக் கொண்ட பிரமதேவன். வேதம் ஓதுதலிலும் சிவ வழிபாட்டிலும் பிரமதேவன் சிறந்தவனாகலின் பிரமதேவனைப் போன்ற மறையோர் எனக்கூறியருளினார்.

சேர்தல் — இடைவிடாது தியானித்தல். ''மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார்.........'' என்ற திருக்குறள் உரையில் சேர்தல் என்பதற்கு இடைவிடாது தியானித்தல் என்று பரிமேலழகர் பொருள் கூறியது காண்க.

பரக்குந்தொல்சீர்த் தேவர்கள்சேனைப் பௌவத்தைத்
துரக்குஞ்செந்திப் போலமர்செய்யுந் தொழில்மேவும்
அரக்கன்திண்டோள் அழிவித்தானக் காலத்திற்
புரக்கும்வேந்தன் சேர்தருமூதூர் புறவம்மே. 8

8. விரிந்த பழைமையான பெருமையையுடைய தேவர்களது சேனையாகிய கடலை ஓட்டுகின்ற செந்தீயைப் போன்று சண்டை செய்யுந்தொழில் பொருந்திய இராவணனது வலிமை மிகுந்த தோள்களை அக்காலத்தில் அழிவித்தவனாகிய (அவனையும்) காக்குங் கடவுளாகிய சிவபிரான் எழுந்தருளிய பழைமையான ஊர் திருப்புறவம் ஆகும்.

தேவர்களது சேனையைக் கடல் எனவும் இராவணனது போர்செய்யும் ஆற்றலைத் தீ எனவுங்கூறினார். கடல்போன்ற தேவரது சேனையை விரட்டும் ஆற்றலுடையவனாயினும் இறைவனால் தோள்வலியழிக்கப்பட்டான் என்பது இத்திருப் பாடலின் கருத்தாகும். இதனால் இறைவரது பேராற்றல் புலப்படும்.

அக்காலத்தில் — கயிலைப் பெயர்த்தெடுக்க முயன்ற அந்தச் சமயத்தில் எனக் கொள்க. இங்ஙனமின்றி, அக் காலத்தில் என்பதை புரக்கும் வேந்தன் என்பதோடு இயைத்து, அந்த காலத்தில்காப்பவனாகிய சிவபெருமான், அதாவது அடியார்கள் துன்பப்படும் காலமறிந்து அக்காலத் தில் வந்து காப்பவன் என்று கோடலும் பொருந்துவதே யாம்.

மீத்திகழண்டந் தந்தயனோடு மிகுமாலும்
மூர்த்தியைநாடிக் காணவொண்ணது முயல்விட்டாங்(கு)

ஏத்தவெளிப்பா டெய்தியவன்றன் இடமென்பர்
பூத்திகழ்சோலைத் தென்றலுலாவும் புறவம்மே 9

9. பெருமை விளங்குகின்ற இந்த அண்டமெனப்படும் உலகத் தொகுதியைப் படைத்தவனாகிய பிரமதேவனோடு (அவனைப் படைத்த) சிறப்புடைய திருமாலும் (அழற்பிழம்பாக) உருவங்கொண்ட சிவபெருமானை (அடிமுடி) தேடிக் காணவொண்ணாது (பிறகு) தமது தேடும் முயற்சியைக் கைவிட்டுத் துதித்துவணங்க (அவர்களுக்கு) வெளிப்பட்டுக் காட்சியளித்தவனாகிய சிவபிரானது இடம், பூக்கள் திகழ்கின்ற சோலைகளில் தென்றல் காற்று உலாவுகின்ற திருப்புறவம் என்று கூறுவர்.

மீத்திகழ் அண்டம் —மேலே விளங்குகின்ற விண்ணுலகம் எனவும் பொருள் கொள்ளலாம். அங்ஙனம் கொள்ளின் உபலட்சணமாக மண்ணுலகம், பாதாள உலகம் ஆகியவற்றையும் சேர்த்து அவற்றின் தொகுதியான அண்டம் எனப் பொருள் கொள்ளவேண்டும். இத்தகைய அண்டத் தொகுதிகள் நூற்றொரு கோடியினும் மிகுதியாகப் பரந்தன எனத் திருவாசகம் திருவண்டப்பகுதி 1—4 அடிகள் கூறுகின்றன. எனவே பெருமை திகழ் அண்டம் எனப்பொருள் கொண்டோம்.

தந்தயன் — தந்த அயன், உலகத்தைத் தந்த (படைத்த) பிரமதேவன்.

முயல்விட்டு — முயல்வு விட்டு. முயற்சியைக் கைவிட்டு,

வையகம்நீர்தீ வாயுவும்விண்ணும் முதலானான்
மெய்யலதேரர் உண்டிலையென்றே நின்றேதம்
கையினிலுண்போர் காணவொணாதான் நகரென்பர்
பொய்யகமில்லாப் பூசுரர்வாழும் புறவம்மே. 10

10. நிலம், நீர், தீ, வாயு, ஆகாயம் எனப்படும் ஐம்பெரும் பூதங்கட்கும் முதற் பொருளானவனும், உண்மையல்லாத கொள்கைகளையுடைய பௌத்தர்கள்—உண்டு

இல்லை என்று கூறி நின்று கொண்டே தங்கள் கைகளில் உணவை ஏற்று உண்ணுதலையுடைய சமணர்கள் ஆகிய புறச்சமயிகளால் அறியவொண்ணுதவனுமாகிய சிவ பிரானது நகர், உள்ளத்தில் பொய்யில்லாத பூசுரர்கள் வாழ்கின்ற திருப்புறவம் என்று கூறுவர்.

முதலானுன் — முதல் ஆனுன், முதற்பொருளானுன். முத லானுன் என்பதற்கு விண், மண், நீர், தீ, காற்று முத லானவை ஆனுன் எனக் கொண்டால் இவ்வைந்திஞேடு சூரியன், சந்திரன், ஆன்மா என்ற மூன்றையும் சேர்த்து அட்ட மூர்த்தியானுன் என்று இறைவனது எட்டு மூர்த்தங் களைக் கொள்ளுதலும் சிறப்புடைத்தாகும்.

உண்டுஇல — அஸ்தி — நாஸ்தி எனக்கூறும் சமணர் கொள்கை.

பூசுரர் — நிலவுலகிலே தேவர்கள் போன்று விளங்கு பவர். இதனுல் அக்காலத்துப் பிராமணர்களது சிறப்பு விளங்குகிறது.

பொன்னியல்மாடப் புரிசைநிலாவும் புறவத்து
மன்னியஈசன் சேவடிநாளும் பணிகின்ற
தன்னியல்பில்லாச் சண்பையர்கோன்சீர்ச் சம்பந்தன்
இன்னிசையீரைந் தேத்தவல்லோர்கட் கிடர்போமே. 11

திருச்சிற்றம்பலம்.

11. அழகு பொருந்திய மாடங்களும் மதில்களும் விளங்குகின்ற திருப்புறவத்தில் என்றும் நீங்காது நிலைத்து நிற்கும் சிவபிரானது செம்மையான திருவடிகளை நாள் தோறும் பணிகின்ற சிவபோதமற்றவனும், சண்பை என் ஞெரு பெயர் பெற்ற சீகாழியிலுள்ளார்க்குத் தலைவனு மாகிய திருஞானசம்பந்தன் பாடிய இனிய இசைமாலையா கிய இந்த பத்துத் திருப்பாடல்களையும் பாடி ஏதித வல்லவர் களுக்கு இடர்களாயினவெல்லாம் அகன்று போகும்.

பொன் — பொலிவு, அழகு; இயலுதல் — பொருந்துதல் மன்னிய — நிலைபெற்ற

தன்னியல்பில்லாச் சம்பந்தன் — தனவயமற்றுப் பரனு கிய சிவன் வயமாகிய திருஞானசம்பந்தன். சீவபோதம் அற்றுச் சிவபோதமுற்றவன் என்பதாம். இத்திருப்பாடலும் திருஞானசம்பந்தரது திருப்பாடல்கள் யாவும் சிவபோதம் மேலிட்டுப் பாடப்பெற்றமையால் பதிவாக்கேயாம் என்று உணர்த்தும் பெருமையுடையதாம்.

[ஆசிரியர் குறிப்பு : இவ்வருமைத் திருப்பதிகத்தின் 2,6 ஆகிய இரண்டு திருப்பாடல்களுக்கும் உரையெழுதும் முயற்சியில் இராணிப்பேட்டை புலவர் திரு. பி. மா. சோம சுந்தரனார் அவர்களும், தூத்துக்குடி நண்பர் திரு. த. சி. ச. இராமச்சங்கு பாண்டியன், B.A., அவர்களும் உதவிய விளக்கங்கள் பெரிதும் பயன்பட்டன என்பதைப் பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும், நன்றியுடனும் தெரிவித்துக் கொள்கிறோம்.]

சிவம்

யாரே எம்போல அருளுடையார்?

திருச்சிற்றம்பலம்

யாரேஎம் போல அருளுடையார் இன்கமலத்
தாரேயும் சென்னித் தமிழ்விரகன்—சீரேயும்
கொச்சை வயன் தன் குரைகழற்கே மெச்சி
அடிமைசெயப் பெற்றேன் அறிந்து.

திருச்சிற்றம்பலம்.

—நம்பியாண்டார் நம்பிகளருளிய
ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம் : 44

சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

திருப்புறவம்—2

பண்-சாதாரி] திருவிராகம் [3-ம் திருமுறை

பெண்ணிய லுருவினர் பெருகிய புனல்விர வியபிறைக்
கண்ணியர் கடுநடை விடையினர் கழல்தொழும் அடியவர்
நண்ணிய பிணிகெட அருள்புரி பவர்நணு குயர்பதி
புண்ணிய மறையவர் நிறைபுக ழொலிமலி புறவமே. 1

பதிகப்பொழிப்புரை : *1.* உமாதேவியார் தமது இடப் பக்கத்தே பொருந்திய வடிவமுடையவரும், பெருக்குற்ற கங்கை நீரோடு கூடிய பிறைச் சந்திரனாகிய தலைமாலையை உடையவரும், விரைந்த நடையையுடைய எருதினை (வூர்தியாக) உடையவரும், திருவடிகளைத் தொழுகின்ற அடியவர்கள் அடைந்த நோய் கெடுமாறு அருள் புரிபவருமாகிய சிவபிரான் சேர்தலையுடைய உயர்ந்த பதி (தலம்) புண்ணியங்களையே செய்பவர்களாகிய மறையவர்களது நிறைந்த புகழின் ஒலி மிகுதலையுடைய திருப்புறவம் ஆகும்.

பிணி — நோய், பிறவிப்பிணியைக் குறித்தது. மறையவர் நிறை புகழொலி மிகு என்பது மறையவர்கள் ஒருங்கு கூடி இறைவனைப் புகழ்ந்து தோத்திரங்களைச் சொல்லும் போது உண்டாகும் ஒலியின் மிகுதி அல்லது மறையவர்களைப் பிறர் புகழ்கின்ற ஒலியின் மிகுதியைக் குறிக்கும். முன் "கங்கை நாடுயர் கீர்த்தி மறையவர்'' என்றருளிச் செய்துள் ளதும் காண்க. (''பொங்கு வெண்புரி'' எனத் தொடங்கும் பதிகத்தின் 5-ம் திருப்பாடல், இம்மாலை பக்கம்-24 காண்க)

கொக்குடை இறகொடு பிறையொடு குளிர்சடை முடியினர்
அக்குடை வடமுமொர் அரவமு மலரரை மிசையினில்
திக்குடை மருவிய உருவினர் திகழ்மலை மகளொடும்
புக்குட னுறைவது புதுமலர் விரைகமழ்புறவமே. 2

2. கொக்கின் இறகோடும் பிறைச்சந்திரனோடும் கூடிய குளிர்ந்த சடைமுடியை உடையவரும், அக்குமாலையோடு ஒரு பாம்பும் விளங்கும் இடுப்பினில் திசைகளையே உடையாகப் பொருந்தியவருமான சிவபிரான், (தனது இடது பாகத்தில்) திகழ்கின்ற மலைமகளாம் உமாதேவியாருடன் புகுந்து உடன் உறைவது புதிய மலர்களின் மணம் கமழ்தலையுடைய திருப்புறவம் ஆகும்.

கொக்குடை இறகு — கொக்கு வடிவாக வந்த ஒரு அசுரனைக் கொன்று அதன் அறிகுறியாய் அக்கொக்கின் இறகை இறைவர் தமது தலையில் அணிந்தனர் என்ற புராண வரலாறு பற்றி இங்ஙனம் கூறினர்.

அக்குமாலை — சங்கு மணிகளாலான மாலை. எலும்பு மாலையுமாம்.

மலர் அரை மிசையினில் — விளங்குகின்ற இடுப்பின் மேல்.

திக்குடை மருவிய உருவினர்—திக்குகளையே உடையாக (வேறு உடையேதுமில்லாதவர்) உடையவர், அதனால் இறைவர் திகம்பரர் எனப்படுவார். இது இறைவரின் பிட்சாடன மூர்த்தத்தைக் குறித்தது.

மணங் கமழ்தல் — மணம் பரவுதல்.

கொங்கியல் சுரிகுழல் வரிவளை இளமுலை உமையொரு
பங்கியல் திருவுரு உடையவர் பரசுவொ டிரலைமெய்
தங்கிய கரதல முடையவர் விடையவர் உறைபதி
பொங்கிய பொருகடல் கொளவதன் மிசையுயர் புறவமே. 3

3. வாசனை பொருந்திய சுரிந்த கூந்தலையும் அழகு உடைய வளையல்களையும இளமையான கொங்கைகளையும் உடைய உமாதேவியார் ஒரு பாகத்திலே பொருந்திய திருவுருவை உடையவரும், மழுவோடு மான்கூடிய கரதலத்தை உடைய திருமேனியையுடையவரும், எருதினை ஊர்தியாகி உடையவருமான சிவபிரான் உறைகின்ற பதி, பொங்கு

எழுந்து பொருதலையுடைய கடல் (உலகத்தைக்) கொள்ள (தான் மூழ்காது) அக்கடலின் மீது உயர்ந்து தோன்றிய திருப்புறவம் ஆகும்.

அர்த்தநாரீசுவரர், மான் மழுவேந்திய கையர், விடையவர் என மூன்று வடிவங்களை இத்திருப்பாடல் நினைப்பூட்டுகின்றது.

சுரிதல் — வளைதல்; வரி — நிறம், வண்ணம், வடிவு போன்ற பொருள்கள். எனவே 'அழகு' எனக்கொண்டோம்.

ஊழிக்கால வெள்ளம் உலகனைத்தையும் கொண்ட போது சீகாழி மூழ்காது ஓங்கி நின்றது என்ற சீகாழித் தல புராணச் செய்தி இத்திருப்பாடலின் 4-வது அடியால் உணர்த்தப்படுகிறது.

பரசு —கோடரி, இங்கு இறைவரின் மழு என்ற படைக் கலத்தைக் குறித்தது. இரலை — மான்.

பொருதல் — மோதுதல், கடலலைகள் கரையின்மீது மோதலால் பொருகடல் எனப்பட்டது.

மாதவ முடைமறை யவனுயிர் கொளவரும் மறலியை
மேதகு திருவடி இறையுற உயிரது விலகினுர்
சாதக உருவியல் கானிடை உமைவெரு வுறவரு
போதக உரியதள் மருவினர் உறைபதி புறவமே. 4

4. பெரிய தவமுடைய மறையவராகிய மார்க்கண்டேய முனிவரின் உயிரைக் கவர்ந்து கொள்ள வந்த இயமனைத் தனது சிறந்த திருவடி சற்றே பொருந்திய மாத்திரத்தில் (அவனது) உயிர் விலகும்படிச் செய்தவரும் பூத கணங்கள் திரிகின்ற காட்டினில் உமாதேவியார் அஞ்சும்படி வந்த யானையின் தோலை உரித்துப் போர்த்தியவருமாகிய சிவபிரான் உறைகின்ற பதி திருப்புறவம் ஆகும்.

இறை — இங்கு 'அற்பம்' அதாவது சிறிது என்ற பொருளில் வந்தது. சாதகவுரு — பூதகணங்கள்.

சாதகம் — பூதம், "குறள் கிருத்திமமே கூளி பாரிடம் சாதகம் செந்நெறியில் பூதப்பேர் ஐந்தாம்" (சூடாமணி நிகண்டு).

போதகம்—யானை; மருவினர் — இங்குப் போர்த்தியவர் என்ற பொருளில் வந்தது. மருவல் — அணைத்தல், கலத்தல், நெருங்குதல், பொருந்தல்.

காமனை அழல்கொள விழிசெய்து கருதலர் கடிமதில்
தூமம துறவிறல் சுடர்கொளு வியவிறை தொகுபதி
ஓமமொ டுயர்மறை பிறவிய வகைதனொ டொளிகெழு
பூமகன் அலரொடு புனல்கொடு வழிபடு புறவமே. 5

5. மன்மதனை எரிகொள்ளும்படி விழித்துப் பார்த்தும் பகைவர்களது காவலுடைய மும்மதில்களையும் புகையெழும்படி வலிய நெருப்பு பற்றச் செய்தவருமான இறைவர் எழுந்தருளிய பதி, ஒளிமிக்க பிரமதேவன் ஓமங்கள் செய்தும் உயர்ந்த வேத மந்திரங்களோடும் மற்றும் வாதிதிய வகைகளோடும் மலரும் நீருங்கொண்டு வழிபட்ட திருப்புறவம் ஆகும்.

கருதலர் — பகைவர்; கடி — காவல்; தூமம் — புகை
பூமகன் — பிரமதேவன்; பிறவியம் — பிற இயம்;
இயம் — வாத்தியம்; அலர் — மலர்.

இத்திருப்பாடலின் பின்னிரண்டு அடிகளால் இத்தலத்தில் பிரமதேவன் சிவபிரானைப் பூசித்த தலபுராண வரலாற்றை அறிவித்தருளினர் திருஞானசம்பந்தர்.

சொன்னய முடையவர் சுருதிகள் கருதிய தொழிலினர்
பின்னையர் நடுவுணர் பெருமையர் திருவடி பேணிட
முன்னைய முதல்வினை யறவரு ளினருறை முதுபதி
புன்னையின் முகைநிதி பொதியவிழ் பொழிலணி புறவமே. 6

6. இனிய சொற்களானமைந்த தோத்திரங்களை (சொல்லுதலை) உடையவர்களும், வேதங்கள் (மாந்தர்கள்

கடைப்பிடிக்க வேண்டுமெனக்) கருதிய தொழில்களைச் செய்பவர்களும், வேதங்களின் பிற்பகுதியான உபநிடதங்களைப் பயிலுபவர்களும், வேதங்களின் நடுவில் நிறுவப்பட்ட பரம்பொருளைத் (சிவத்தை) தமது அறிவினால் அறிந்த பெருமையுடையவர்களும் (ஆகிய அடியவர்கள்) திருவடிகளைப் போற்றி வழிபட (வழிபடுவாரது) தொன்று தொட்டாகவுள்ள முதல் வினையானது அறும்படி அருள் செய்பவராகிய சிவபிரான் உறையும்பதி, புன்னையின் அரும்பாகிய பொன் முடிப்பு அவிழ்தலையுடைய பொழில்கள் சூழ்ந்த திருப்புறவம் ஆகும்.

சொல் நயம் உடையவர் — நயம் சொல் உடையவர் என மாற்றிப் பொருள் கொள்ளப்பட்டது. நயம் — இனிமை, நன்மை. சொல்நயம், பொருள்நயம் அதாவது சொல்லின் இனிமை, பொருளின் இனிமை என நயம் இருவகைப்படும். இங்கு, இவ்விருவகை இனிமையும் கூடிய சொற்களால் ஆன தோத்திரங்களை எப்பொழுதும் சொல்பவர்கள் எனப் பொருள் கொள்க.

சுருதிகள் கருதிய தொழிலினர் — சுருதி என்பது வேதம். தொழிலினர் என்றருளியதால் வேதங்களில் விதிக்கப்பட்ட கர்மாக்களைச் செய்பவர்கள் அதாவது கர்ம காண்டம் எனப்படும் முதல் பிரிவைக் கடைப்பிடிப்பவர்கள் இவர்களைக் கர்ம காண்டிகள் என வழங்குவர்.

பின்னையர் — வேதம் கர்மகாண்டம், ஞானகாண்டம் என இரு வகைப்படும். "சுருதிகள் கருதிய தொழிலினர்" என்று கர்ம காண்டிகளை முதலில் கூறியபடியால் பின்னையர் என்பது வேதத்தின் பிற்பகுதியான உபநிடதங்கள் என்னும் ஞானகாண்டத்தைக் கடைப்பிடிப்பவர்களைக் குறிக்கும். கர்ம காண்டத்தைக் கடைப்பிடித்துப் பின் ஞானம் உறுதலாலே கர்மானுட்டானங்கள் தாமாவே இவர்களைவிட்டு நழுவிய நிலையிலிருப்பவர்கள். இவர்களை ஞானகாண்டிகள் எனக்கூறுவர்.

நடுவுணர் பெருமையர் — கர்மகாண்டம், ஞான காண்டம் என இரு பிரிவுகளாயமைந்த வேதத்தின் நடு, அதாவது உள்ளீடாகவுள்ள பொருள் "சத்" எனப்படும் சிவமே எனத் தமது அறிவினால் அறிந்த பெருமையை உடையவர்கள்.

இங்ஙனம் நான்கு பிரிவாயமைந்த அடியார்கள் திருவடி பணிய இறைவர் திருப்புறவத்திலே எழுந்தருளியுள்ளார். அங்ஙனம் பணிபவர்களது பழவினையாகிய முதல் வினையை அறுத்துத் தமது திருவடிப் பேறு என்னும் பேரின்பத்தை அளிக்கின்றார் என்பது இத்திருப்பாடலின் கருத்தாகும்.

பின்னையர் நடுவுணர் என்பதை பின்னைய நடுவுணர் எனப் பாடங்கொண்டு சுருதிகள் கருதிய தொழிலுக்கு அப் பாற்பட்ட ஞானநெறியினதாகிய நடுவுணர் பெருமை எனவே சாலும் என்பது புலவர் திரு. பி. மா. சோம சுந்தரனார் தரும் விளக்கம் ஆகும்.

முன்னைய முதல்வினை — பழையவினை, தொல்வினை என்று கூறப்படும் சஞ்சிதம் எனப்படும் வினைக்கூட்டம். வினை, சஞ்சிதம் எனப்படும் தொல்வினையும், இப்பிறவியில் அனுபவித்துக் கழிக்க வேண்டிய பிராரப்தம் என்னும் வினையும், இப்பிறவியின் செயல்களால் ஈட்டி மேலே வரக்கடவதாகிய ஆகாமியம் என்னும் வினையும் சேர்த்து மூவகைப் படும். இவற்றுள் முன்னைய முதல்வினை இறைவனால் அழிக்கப்படுதலாலும், பிராரப்தம் அனுபவித்துக் கழிக்கப்படுதலாலும், இறைவர் திருவடி பணிவதால் இனி வரக்கடவதாகிய மேல்வினையும் இன்மையாலும் இனிப் பிறவி இல்லையாம் எனக் கொள்க. இதனையே முதல்வினையற அருளினர் எனப் பிள்ளையார் குறிப்பிட்டருளினர்.

புன்னையின்.........புறவமே — புன்னை மரத்தின் மொட்டு பொன் முடிப்பாகவும் அதன் மகரந்தமே பொன்னாகவும், மொட்டு மலர்தலை பொதியவிழ்தலாகவும் உருவகம் செய்து

சீகாழியின் பொழில் வளத்தைக் கூறினர். இத்தகைய பொழில்கள் சூழ்ந்த சீகாழி என்பதாம்.

மொட்டு — மலரும் பருவத்தேயுள்ள அரும்பு. இது உரிய காலத்தே மலர்ந்து பூந்தாதுக்களைச் சொரிவது போல இறைவரது திருவருளும் உரிய காலத்தில் அடியார்களுக்கு வீடுபேற்றையளிக்கும் என்பது இத்திருப்பாடலின் 4-வது அடி நமக்கு குறிப்பாலுணர்த்தும் உள்ளுறை பொருளாகக் கொள்க.

வரிதரு புலியதள் உடையினர் மழுவெறி படையினர்
பிரிதரு நகுதலை வடமுடி மிசையணி பெருமையர்
எரிதரு முருவினர் இமையவர் தொழுவதொ ரியல்பினர்
புரிதரு குழலுமை யொடுமினி துறைபதி புறவமே. 7

7. வரிகளையுடைய புலியின் தோலை உடையாகக் கொண்டவரும், எறிதலையுடைய மழுவென்னும் படைக்கலத்தையுடையவரும், பிரிந்து வந்த நகுதலையைத் திருமுடியின் மீது மாலை போல அணிந்து கொண்ட பெருமையுடையவரும், எரி போல் ஒளிர்கின்ற உருவத்தையுடையவரும், தேவர்களனைவரும் தொழுவதாகிய ஒரு தன்மையுடையவரும் ஆகிய சிவபிரான் பின்னிய கூந்தலையுடைய உமாதேவியாருடன் இனிதே உறைகின்ற தலம் திருப்புறவம் ஆகும்.

பிரிதரு நகுதலை — பிட்சாடனத் திருக்கோலத்துடன் தாருக வனத்தில் பிரவேசித்து அங்குள்ள இருடியர்களின் மனைவிமார்களை மயக்கிய சிவபிரானைக் கொல்லும் பொருட்டு அவ்விருடியர்கள் செய்த ஆபிசார வேள்வியினின்றும் பிறந்த பலவற்றுள் நகுதலையும் (நகைத்துக் கொண்டே வந்த தலை) ஒன்றாகும். வேள்வித் தீயினின்றும் பிரிந்து வந்தமையால் பிரிதரு நகுதலை எனக் கூறியருளினர் போலும். அங்ஙனம் கொல்ல வந்த தலையை அதன் வலிமையை அழித்துத் தனது தலையில் மாலை போல அணிந்து

கொண்ட ஆற்றலையே பெருமை எனக் கூறினர். "உலகம் யாவும் தொலைய நக்கெழுந்தது'' என்று இதனைக் கந்த புராணம் கூறும். (கந்தபுராணம், தட்ச காண்டம், ததீசி உத்தரப்படலம், 108-109—ம் பாடல்களில் இவ்வரலாறு கூறப்பட்டுள்ளது)

எரிதரும் உருவினர் — தீ வண்ணர், அழல் வண்ணர்.

வசிதரு முருவொடு மலர்தலை உலகினை வலிசெயும்
நிசிசர னுடலொடு நெடுமுடி யொருபது நெரிவுற
ஒசிதர வொருவிரல் நிறுவினர் ஒளிவளர் வெளிபொடி
பொசிதரு திருவுரு வுடையவர் உறைபதி புறவமே. 8

8. வாளேந்திய கோலத்தோடு அகன்ற இவ்வுலகத்தைத் தனது வலிமையால் துன்புறுத்திய அரக்கனாகிய இராவணனது உடலோடு நெடிய தலைமுடிகள் பத்தும் நசுங்கலுற்றுத் துவளும்படி ஒரு திருவிரலை ஊன்றினவரும், ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற திருநீற்றை மிகுதியாகப் பூசப் பெற்ற திருவுருவையுடையவருமாகிய சிவபிரானார் உறையும் பதி திருப்புறவம் ஆகும்.

வசி — வாள். வசி என்ற சொல்லுக்குக் குற்றம் என்ற பொருள் உண்மையாலும் குற்றத்தை இருள் நிறமாகச் சொல்லும் வழக்குண்மையாலும் வசிதரும் உரு என்பதற்கு இருளின் கரிய நிறம் உடைய அரக்கன் எனக் கொள்ளினும் அமையும்.

வசி என்பதற்கு குற்றம் என்ற பொருளையே கொண்டு வசிதரும் உருவொடு — பாவங்களையே மேன் மேலும் கூட்டும் அச்சந்தரும் வடிவத்தோடு என்று புலவர் திரு. பி. மா. சோமசுந்தரனார் விளக்கந்தருவர்.

நிசிசரன் — அரக்கனாகிய இராவணன். நிசி — இரவு சரன் — இயங்குபவன். அதாவது இரவில் இயங்குபவன் என்பதாம். அரக்கர்கள் இரவில் அதிக வலிமை பெற்றுத் திரிவர் என்று கூறப்படுகிறது.

நெரிவுறுதல் — நசுங்குதல்; ஒசிதருதல் — துவளுதல், சாய்தல். வெளிபொடி — வெண்மையான திருநீறு; பொசி தருதல் — கசிதல், வடிதல் முதலிய பொருள்களைத்தரும் இச்சொல் இங்குத் திருநீற்றை மிகுதியாகப் பூசுதலைக் குறித்தது.

தேனக மருவிய செறிதரு முளரிசெய் தவிசினில்
ஊனக மருவிய புலனுகர் வுணர்வுடை யொருவனும்
வானகம் வரையக மறிகடல் நிலனெனு மெழுவகைப்
போனக மருவினன் அறிவரி யவர்பதி புறவமே. 9

9. உள்ளிடத்தில் தேன் பொருந்தியதும் இதழ்கள் பல செறிந்ததுமான தாமரை மலராகிய ஆசனத்தில் (அமர்ந்த) உடலகத்துப் பொருந்திய ஐம்புலன்களின் நுகர்ச்சியாலாய அறிவுடைய பிரமதேவனும், ஏழு மேலுலகம், ஏழு மலை யிடங்கள், ஏழு கடல்கள், ஏழு நிலன்கள் என்னுமிவற்றை உணவாக உண்டவனாகிய திருமாலும் அறிதற்கரியவராகிய சிவபிரானாரது பதி திருப்புறவம் ஆகும்.

ஊனகம் — உடம்பாகிய இடம். முதலிரண்டடிகளால் பிரமதேவன் ஐம்புலன்களின் வழியாக நுகரும் உணர்வு டையவன் என்று குறிப்பிட்டார். எனவே அவன் பொறி வாயில் ஐந்தவித்தவனாகிய இறைவனைக் காண இயலாது போனதில் வியப்பில்லை என்று குறிப்பிட்டதாயிற்று.

பின்னிரண்டடிகளால் திருமால் ஏழு ஏழாக அமைந்த உலகங்கள், கடல்கள், மலைகள், ஆகியவற்றின் தொகுதியை உண்ட அத்தகு ஆற்றல் பெற்றவனாயினும் சிவபிரானின் திருவடியைக் காணும் ஆற்றல் பெற்றானில்லை என்று குறிப் பிட்டருளினார். சைவ ஆசாரியர்கள் திருமாலுக்கு இயல் பாக உள்ளதான ஆற்றலைக் குறைத்தாரில்லை என்பதும் வைணவர்கள் சிவநிந்தை செய்வது போல விட்டுணு நிந்தை செய்தாரில்லை என்பதும் இதனால் விளங்கும். சிவ பிரானின் பேராற்றலின் முன் திருமாலுள்பட மற்றையு

தேவர்களின் ஆற்றல் நில்லாது என்பதே நமது ஆசாரியர்கள் உணர்த்தியருளியது எனக் கொள்க.

ஏழு ஆகாயம் — ஏழு மேலுலகங்களைக் குறிக்கும். அவை :— பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மகர்லோகம், சனலோகம், தவலோகம், சத்தியலோகம் என்பனவாம்.

ஏழு வரையகம் — கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என்பனவாம். இவற்றுடன் கந்தமாதனம் கூட்டி மலைகள் எட்டு எனக் கூறலும் உண்டு.

ஏழு கடல் — உப்புக்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், மதுக்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல், சுத்த நீர்க்கடல் என்பன.

ஏழு நிலன் — இங்கு பூலோகத்துக்குக் கீழ்ப்பட்ட கீழுலகங்கள் ஏழையுங் குறிக்கும். அவையாவன !— அதலம், விதலம், சுதலம், தராதலம் இரசாதலம், மகாதலம், பாதாளம் என்பனவாம்.

ஏழுவகைப் போனக மருவினவன் – திருமால் கிருட்டிணாவதாரத்தில் பாலகனாயிருந்து விளையாடிக் கொண்டிருக்கையில் ஒரு பிடி மண்ணை வாயில் இட்டுக் கொண்டனன் என்றும், அதறிந்த தாய் யசோதை பதைத்தோடிப் போய் அவன் வாயைத் திறக்கச் சொல்லிப் பார்க்க அதனுள் உலகத் தொகுதி அனைத்துங் கண்டாள் என்றும் திருமாலுக்கு ஏற்றங் கூறுவதாக வைணவ நூல்களில் காணப்படும் கதையையும் மருது ஒப்பி, நமது பெருமானார் தமது திருவாக்கில் வைத்துக் கூறியருளியது அவரது பெருந்தகைமையைக் காட்டுகிறது எனத் தெளிக.

கோசர நுகர்பவர் கொழுகிய துவரன துகிலினர்
பாசுர வினைதரு பளகர்கள் பழிதரு மொழியினர்
நீசரை விடுமினி நினைவுறு நிமலர்தம் உறைபதி
பூசுரர் மறைபயில் நிறைபுக ழொலிமலி புறவமே. 10

10. நீரில் சஞ்சரிக்கின்ற மீன்களை உணவாகக் கொள்பவர்களும் துவர் தோய்க்கப்பட்ட ஆடையணிபவர்களுமாகிய பௌத்தர்களும், (தங்களது அவமாய கொள்கைகளை நிலை நாட்ட வேறு வழியின்றி) கிளி விருத்தம், நரி விருத்தம், எலி விருத்தம் போன்ற பொய்க் கதைகளைக் கொண்ட பாசுரங்களால் வினைப்பயனை விளக்க முற்பட்டு (மெய் போலக் காட்டும்) குற்றமுடையவர்களுமாகிய சமணர்களும் ஆகிய இவ்விரு வகையான நீசர்களையும் விடுவீர்களாக. (அங்ஙனம் விட்டு) இனி நீங்கள் நினைவுறுதல் வேண்டிய நிமலராகிய சிவபிரானது பதி, வேதங்களைப் பயிலுகின்ற அந்தணர்களது நிறைந்த புகழின் ஒலி மிகுதலையுடைய திருப்புறவம் ஆகும்.

கோ — நீர், சரம் — அதில் இயங்கும் மீன்கள். பௌத்தர்களின் கொல்லாமை விரதம் என்பது தங்கள் கைகளால் கொல்லலாகாது என்ற அளவேயாம். பிறர் கொன்று கொணர்ந்த இறைச்சி முதலியவற்றை உண்பதை அவர்களது கொல்லாமை விரதம் தடை செய்யவில்லை. எனவே மீன்களை உண்பார்கள்.

துவர் கொழுவிய துகில் — இது ஒரு வகைக் காவி நிறம் ஊட்டப் பெற்ற பௌத்தர்களது ஆடையைக் குறித்தது.

பாசுர வினைதரு பளகர்கள் — "கூட்டினார் கிளியின் விருத்தம், உரைத்தோர் எலியின் தொழிற்பாட்டு மெய் சொலிப் பக்கமே செலுமெக்கர்" என்று இக்கருத்தைத் திருவாலவாய்ப் பதிகத்தும் செப்பியருளியது இங்கு அறிதற்பாற்று.

பளகர்கள் — பளகு — குற்றம், அதையுடையவர்கள் பளகர்கள் என்பதாம். (பாவிகள் என்றும் கொள்ளலாம்)

பழிதரு மொழியினர் — பிறரைப் பழித்தலையே தமது இயல்பாகவுடையவர்கள் சமணர்கள் என்பதை "பொங்கு

நூல் வழியன்றியே புலவோர்களைப் பழிக்கும் போலா அமைதர்........'' என்று திருவாலவாய்ப் பதிகத்திலும் திருஞானசம்பந்தர் அருளிச் செய்துள்ளது காண்க.

நீசர்கள் — கீழ்மக்கள், கயவர்கள். நீசர்களாகிய பௌத்தர்களையும் சமணர்களையும் (அவரைக் காணாதும் அவருரை கேளாதும்) விட்டு, நின்மலப் பொருளாகிய சிவபிரான் உறையும் பதியாகிய திருப்புறவத்தையே நினைவுறும் என்று இயைத்தும் பொருள் கொள்ளலாம். இவ்வாறு கொள்ளின் நினைவுறும் என்பது நினைவுறுங்கள் அதாவது சிந்தை செய்யுங்கள் என்று பொருள்படும்.

பூசுரர் மறைபயில் — மறைபயில் பூசுரர் என மாற்றிப் பொருள் கொள்ளப்பட்டது.

போதியல் பொழிலணி புறவநன் னகருறை புனிதனை
வேதிய ரதிபதி மிகுதலை தமிழ்கெழு விரகினன்
ஓதிய வொருபது முரியதொ ரிசைகொள வுரைசெயும்
நீதிய ரவரிரு நிலனிடை நிகழ்தரு பிறவியே. 11

திருச்சிற்றம்பலம்.

11. மலர்களையுடைய பொழில்கள் சூழ்ந்த திருப்புறவம் என்ற நல்ல நகரில் எழுந்தருளியுள்ள புனிதனாகிய சிவபிரானை, வேதியர்களது தலைவனும் மிக்க முதன்மையுடைய தமிழ் விளங்கும் சமர்த்தனுமாகிய திருஞானசம்பந்தன் ஓதியவையாகிய இந்தப் பத்துப் பாடல்களையும் உரியதாகிய இசை பொருந்தும்படி பாடும் முறைமை தவறாதவர்கள் இந்தப் பெரிய உலகத்தில் இனி நிகழ்தலாகிய பிறவி இல்லாதவர்களாக ஆவார்கள்.

மிகுதலை தமிழ் விரகினன் — தலைமைத் தன்மை மிக்கு விளங்கும் தமிழ் மொழியில் சமர்த்தன் (வல்லவன்). திருஞானசம்பந்தர் திரு அவதாரத்தால் எல்லா மொழிகளிலும் தமிழ் தலைமை பெற்றது என்று கொள்க.

நீதியர் — முறைமை தவறாதவர்.

நீதியர் அவர் இரு நிலனிடை நிகழ்தரு பிறவியே — 'இல்லை' என்ற ஒரு சொல் வருவித்து, நீதியராகிய அவர்க்கு இனிப் பிறவியே இல்லை என்று பொருள் உரைக்கப்பட்டது. இவ்வாறின்றி மற்றொரு வகையாகப் பொருள் கூறுதலுங் கூடும் எனப் புலவர் திரு. பி. மா. சோமசுந்தரனார் கூறுவதாவது :

ஞானபோனகர் "அடியார்கள் தாம் ஒவுநாளும் உணர்வொழிந்த நாள்" என்று ஒரு திருப்பாடற்கண்ணும் "வாழ்ந்த நாளும் இனி வாழுந்நாளும் இவையறிதிரேல் வீழ்ந்த நாள் எம் பெருமானை ஏத்தா விதியில்லீர்காள்" என மற்றொரு பாடற்கண்ணும், அப்பர் பெருமான் "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" எனவும் அருளிச் செய்துள்ளார்கள். எனவே உரை செய்யும் நீதியரவர் இரு நிலனிடை நிகழ்தரு பிறவியினராவர். ஏனையோர் பயனின்றி வாழ்ந்து வாழ்நாளை வீண் நாள் செய்தலால் பிறந்திருந்தும் இறந்தவரேயாவர் என்றும் பொருள்படுத்த இயலும்.

சிவம்.

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜபம்

திருச்சண்பை விருத்தம்—3

திருச்சிற்றம்பலம்

குவளைக் கருங்கண் கொடியிடை துன்பம் தவிர அன்று
துவளத் தொடுவிடம் தீர்த்த தமிழின் தொகைசெய்தவன்
திவளக் கொடிக்குன்ற மாளிகைச் சூளிகைச் சென்னி யின்வாய்த்
தவளப் பிறைதங்கு சண்பையர் காவலன் சம்பந்தனே.

திருச்சிற்றம்பலம்

—நம்பியாண்டார் நம்பிகளருளியது, 11—ம் திருமுறை

குவளை மலர் போன்று கரிய கண்களையும், கொடி போன்று இடையினையுமுடைய பெண்ணின் துன்பம் தவிரு மாறு அன்று பாம்பின் விஷத்தைப் போக்கடித்த தமிழ்த் திருப்பதிகம் பாடியவர் (யாவரெனில்) ஒளிவிடுகின்ற அந்தக் கொடிகளையுடைய மாளிகைகளின் உச்சிப் பகுதியின் மேல்புறத்தில் வெண்மையான ஒளியுடைய பிறைச் சந்திரன் தங்குகின்ற திருச்சண்பை நகரிலுள்ளார்க்குக் காவலனாகிய திருஞானசம்பந்தரேயாவர்.

திருஞானசம்பந்தர் திருமருகல் என்னும் தலத்தில் ஒரு வணிகப் பெண்ணின் துயரம் தீர பாம்பு தீண்ட இறந்த ஒரு வணிகனைச் ''சடையாயெனுமால்'' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி உயிர்ப்பித்த சேய்தியைக் கூறுகிறது இத்திருப்பாடல். இவ்வாறு பெரியபுராணம், திருஞான சம்பந்தர் புராணம், 473 முதல் 483 வரையுள்ள 11 திருப் பாடல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

சிவம்

(76-ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பாடல் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

திருப்பாடல் முதற்குறிப்பகராதி

(தொடர்ச்சி 75-ம் பக்கம்)

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்

வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் அருளியது

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவ ஜயம்



யத்யத் கர்ம கரோமி
தத்ததகிலம்
சம்போ தவாராதனம்

Elango Achukoodam, 166, R. H. Road, Mylapore, Ms.-4.

மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை

(சம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிக வெளியீடு)

பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளான தேவாரத் திருப்பதிகங்களை பொழிப்புரை, விசேடவுரை, பதிக வரலாறு, தல வரலாறு, புராண வரலாறு முதலிய உரை விசேடங்களுடன் 108 தமிழ் மாலைகளாகப் பிரசுரித்துச் சிவபெருமானின் 108 திருநாமங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தமிழ் மாலையாகச் சமர்ப்பிக்கும் இந்த திட்டத்தில் இதுவரை 15 தமிழ் மாலைகள் வெளிவந்துள்ளன.

விலை விவரம் :

முதல் ஆறு மாலைகள் ஒவ்வொன்றும்	...	2-00
ஆறு தமிழ் மாலைகளும் சேர்த்து	...	10-00
ஏழாவது தமிழ் மாலை முதல் ஒவ்வொரு தமிழ் மாலையும்	...	3·00
ஒவ்வொரு ஆறு தமிழ் மாலைகளும்	...	15-00
1 முதல் 108 தமிழ் மாலைகளுக்கும் முன்பண உதவிச் சலுகை விலை	...	158-00

சலுகை விலை முன்பணமாகச் செலுத்தப்பட வேண்டும். ஓராண்டுக்குள் தவணைகளாகவும் செலுத்தலாம்.

முன்பணம் கிடைத்தவுடன் இதுவரை பிரசுரமான தமிழ் மாலைகள் உடனடியாக அனுப்பப்பட்டு மற்றவை பிரசுரமானதும் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படும்.

உரையாசிரியர்—பதிப்பாசிரியர்

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா

5, டெலிபோஸ்டு காலனி குறுக்குத் தெரு,
மேற்குமாம்பலம், சென்னை—600 033.